

Vol.27 | No. 1 | January 2023
The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்





DIOCESAN BIBLE CONVENTION,
KALLUVILAI, 2-4.12.2022





ST. VINCENT DE PAUL SILVER JUBILEE &
VAAN INAUGURATION, 11.12.2022





PRESBYTERY BLESSING, (PARAICODE, 18.12.2022)
PRE-CHRISTMAS - SEMINARIANS





MATRU JOTHIS CHRISTMAS CAROLS (Kalluvilai, 17.12.2022 & FOOD FEST (Kalluvilai, 05.12.2022)



PRE-CHRISTMAS WITH BISHOP'S HOUSE NEIGHBOURS, 23.12.2022

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 27 No :01 JANUARY 2023



# இறையருள்
# IRAIARUL

## Editorial Board

Patron
**His Excellency**
**Mar George Rajendran SDB**
Chief Editor
**Fr. Joseph Santhosh**
Associate Editors
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Iyathurai**
**M.R.Merin Sujith**
Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**
DTP & Design:
**Merin Sujith**
Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| ஆயர் திருமுகம் | 06 |
| மறைமாவட்ட முதல் மாமன்றத்திற்கான அழைப்பு ஆணை | 10 |
| மறைமாவட்ட கூரியா செய்திகள் | 12 |
| மறைக்கல்வி | 13 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 18 |
| இளையோர் இயக்கம் (SMYM) | 19 |
| இல்வாழ்வு இயக்கம் | 22 |
| வரவிருக்கும் நிகழ்வுகள் | 24 |
| வின்சென்ட்-தே-பவுல் சபை | 25 |
| மிஷன் லீக் இயக்கம் | 27 |
| கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் | 28 |
| அருட்சகோதரர்களிடமிருந்து | 32 |
| மறைமாவட்ட செய்திகள் | 35 |
| தென்காசி மறைபரப்புதள செய்திகள் | 36 |
| மறைவட்ட செய்திகள் | 37 |
| MONTHLY AGENDA - JANUARY 2023 | 49 |
| BISHOP'S ENGAGEMENTS | 51 |

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/141/2022**

**31 December 2022**

**Dear Readers,**

Greetings and prayerful wishes Bishop's House, Thuckalay!

As the year 2022 is receding away, we are entering into the New Year 2023. Whenever we conclude a year and step into another year, we think of the wonderful gift of God, namely, time. Although God is above time, we are blessed with time with which we can grow, develop and become more humane and spiritual. While wishing you a prosperous and grace-filled New Year, let me remind you that we need to make good use of the precious gift of time that God has generously given to us.

On 30 December 2022, we celebrated the feast of the Holy Family. We know that the only perfect family that ever lived on this earth is the Holy Family of Joseph, Mary and Jesus. On that day, we were made to reflect and to examine the grave responsibility that the parents and the children have in making their families holy after the example set by the Holy Family of Nazareth. In this circular, I want to share with you some of the characteristics of Catholic families and our duties as priests to accompany them in our pastoral ministries in the parishes and other institutions.

A family is a group of persons who are related by marriage or blood, and for us Catholics, the family typically includes a father, mother, and children. It is a natural society whose right to existence and support is provided by the divine law. According to Vatican II, "the family is the foundation of society." In fact, Jesus Christ has instituted two sacraments in his Church to make the society holy. These are the Sacrament of Holy Orders and the Sacrament of Matrimony. Through the Sacrament of Holy Orders, Jesus sanctifies the priest as well as his parish.

Similarly, by the Sacrament of Matrimony, Jesus sanctifies not only the spouses but also the entire family. The husband and wife attain holiness when they discharge their duties faithfully, trusting in God, and drawing on the presence and power of the Holy Spirit,

through personal and family prayer, meditative reading of the Bible, and devout participation in Holy Mass. Families become holy when Christ Jesus is present in them. Jesus becomes truly present in the parish church through the sacrifice of the Holy Mass. Likewise, Jesus becomes truly present in a family when all the members live in the Christian spirit of sacrifice. This happens when mutual understanding, mutual support and mutual respect bind the members in one loving family. There must be proper care and respect given by children to their parents and grandparents, even after they have grown up and left home.

Thus, marriage and the family cannot be considered a mere product of historical circumstances or a superstructure imposed from outside on human love. On the contrary, they are an inner need of this love to fulfil itself in its own truth and in the fullness of the reciprocal gift of self. Even those features of spousal union that today are all too often misunderstood or rejected, such as unity, indissolubility and openness to life, are instead requests for the authenticity of the covenant of love. It is in this very way that the bond which unites the man and the woman becomes an image and symbol of the covenant between God and his people, which finds its definitive fulfilment in Jesus Christ. Therefore, among the baptized marriage is a sacrament, an effective sign of grace and salvation.

We can speak of five characteristic features that should distinguish the Catholic families from other

groups of families. These features are:

- Catholic families worship together. The Eucharist is the source of the deep love and intimacy Catholic families are called to live out. To celebrate this, Catholic families attend the eucharist together on Sundays, holy days, and at other times as they are able. They also actively participate in the sacramental life of the Church.
- Catholic families pray together. Catholic families are called to love with the love that flows from God‘‘s own heart. They can only do this if we ask God as a family to teach them what this means. Therefore, in addition to both individual prayer life and worship in parish communities, families gather together for family prayer each and every day. The members use the daily family prayer time to praise and thank God for his blessings, to ask forgiveness for the times they did not love as they should, to ask for the grace to love one another and the world better and to pray for both family needs and the needs of the family of God.

- Catholic families are called to intimacy. Most importantly, the Christian life is a call to intimate communion with God and with one another. Catholic families serve that goal by being schools of love where the members learn how to love God and one another with their whole hearts, minds, souls and strength. To do this, the members constantly seek new ways to be even more open with and loving to one another as husband and wife, parents and children.
- Catholic families must put family first. Since family relationships are the primary means God uses to help us become the people he created us to be, we must treat family life as the most important activity in our day-today life. We create and protect family customs like regular family dinners, time for prayer and worship, regular communication, constant relationship-building, etc.that give us regular time to work, play, talk and pray together.
- The Catholic families are a witness and a sign. We recognize that God wants to change the world through our families. We actively participate in this plan in two ways. First, we work hard to be witnesses of the love, joy and intimacy that every human heart longs for. We need to share this love in good times and bad, in sickness and health, for richer or poorer. Second, we carry this love outside the home by serving our community in a manner that keeps our family together. We intentionally practise the corporal and spiritual works of mercy within our home and outside of it. We regularly talk about how we can do a better job of living out our family mission to be a sign of God"s love in the world.

To realise all these aspects of family life, the Church encourages her priests to accompany the families within their respective parishes or institutions. This pastoral care of the family requires development and renewal so that it could effectively participate in the realization of God"s plan in contemporary times. In the apostolic exhortation Amoris Laetitia, Pope Francis encourages the priests to develop a deepened and more effective pastoral care for married couples and the family. This care should be generous, full of sensitivity and zeal, as well as including patient pastoral encountering and the accompanying of spouses in the subsequent stages of their life and development. It should also be helpful with regard to discernment and integration into the life of the Church.

During our family visits, we can find out the needs of the family members. We can pray with them. We can teach them the principles

of the gospel and encourage them to attend to their family duties. We can be friendly to the family members at our Church meetings and in the neighbourhood. And we can participate with them in Church, school, and community activities. In all these, we must consider our apostolate with families a source of grace, a gift that the Lord offers us even before we see it as a specific pastoral duty.

St John Paul II also reiterates these forms of family apostolate. On 26 February 2004, he exhorted thepriests of Rome: "Do not be afraid to spend yourselves for families, to dedicate to them your time, energy and the spiritual gifts the Lord has given you. Be caring and trustworthy friends to them as well as pastors and teachers. Accompany them and sustain them in prayer; suggest to them the Gospel of marriage and the family with truth and love, without reservations or arbitrary interpretations. Be spiritually close to them in the trials life often holds in store, helping them to understand that the Church is always mother for them as well as teacher. Also teach the young to understand and appreciate the true meaning of love and thus to prepare themselves for forming authentic Christian families."

Let us spend the year 2023 in strengthening the Catholic families in our Eparchy through our concerted pastoral interventions so that we can build up a vibrant local church where the members live a committed life in living out the faith that they received at the time of their baptism!

On the first day of the year 2023, we celebrate the feast of Mary, the holy Mother of God. It is indeed a wonderful opportunity for all of us to entrust ourselves to the maternal care and protection of Mary as we begin the New Year, which is a precious gift from God. Let us make good use of this year in order to become more Christ-like and to bring his message to as many people as possible so that the invocation – Thy kingdom come - that recite in the prayer Our Father may be realized!

Yours in Christ Jesus,

† George Rajendran SDB

Bishop of Thuckalay

Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

## Pastoral Letter No/GR/48/2022

### ஆயர் சுற்றுமடல்

***ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!***

குழந்தை இயேசுவை வரவேற்பதற்கானத் தயாரிப்பை நாம், 2022, நவம்பர் மாதம் 27 ஆம் தேதி அன்று மங்கள வார்த்தை காலத்தோடு தொடங்கினோம். அத்தோடு, டிசம்பர் முதல் தேதி தொடங்கி 25 ஆம் தேதி வரை, சிறப்புத் தயாரிப்புகளில் ஈடுபட்டிருக்கின்றோம். குறிப்பாக, தவம், செபம் போன்றவை மேற்கொண்டு நமது இதயங்களைத் தயாரித்து வருகிறோம். அடுத்த ஞாயிற்றுக்கிழமை அன்று, கிறிஸ்துமஸ் விழாவை நாம் கொண்டாட இருக்கிறோம். பலிபீடத்தை அணுகி வந்து, திருப்பலி ஒப்புக்கொடுத்து இறைமகனின் பிறப்பை சிறப்பிப்போம். இவ்வேளையில், கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களை மனமார தெரிவித்துக் கொள்வதில் மகிழ்கிறேன். இயேசு கிறிஸ்துவின், மகிழ்ச்சியும் அமைதியும் உங்கள் உள்ளங்களிலும் குடும்பங்களிலும் குடிகொள்வதாக.

மண்ணில் பிறக்கும் குழந்தைகள் ஒவ்வொன்றும் கடவுளின் கொடை என்பதை நாம் அறிவோம். மழலைகளின் புன்னகை மனங்களைக் கொள்ளை கொள்ளும். வறுமையோ செல்வமோ குழந்தையின் புன்னகையை தீர்மானிப்பதில்லை. அதன் சிரிப்பிலும், அழுகையிலும் புது நம்பிக்கைகள் பிறக்கின்றன, எதிர்காலத்தைப் பற்றிய கனவுகள் தெளிவாகின்றன. குழந்தை இறைப்புண்ணியங்களான நம்பிக்கை மற்றும் எதிர்நோக்கின் அடையாளம்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பெத்லகேமில் நமக்காக பிறந்த மீட்பர் இயேசுவின் பிறப்பை நாம் கிறிஸ்துமஸ் நாளன்று கொண்டாடுகிறோம். அதேவேளையில், ஒவ்வொரு கிறிஸ்துமஸ் விழாவும் இயேசுவின் இரண்டாம் வருகையின் குறியீடாகவும்

இருக்கிறது. இயேசுவின் பிறப்பு, இவ்வுலகில் தொடங்கி மறுவுலகில் முழுமைப் பெறும் இறையாட்சியின் வருகையைப் பறைசாற்றியது.

அறிவுக்கெட்டா அதிசயமாக, சின்னஞ்சிறு மழலையாய், பிறர் உதவி நாடி நிற்கும் வலுவற்றவராய் எல்லாம் வல்லவரின் மகன் பிறந்தார். புதுமைகள் புரியும் விந்தைமிகு கடவுள் தம் மகனின் எளியப் பிறப்பு வழியாக மக்களின் மனங்களை வியப்பில் ஆழ்த்தினார். ஏழையருக்கு நிகராகி எளியவராகப் பிறந்தார். நம்பிக்கையின் வெளிச்சத்தை கெடுக்கும் இருள்நிறைந்த அவநம்பிக்கையின் பழமைகளை அவரது வருகையால் நீக்கினார். இதைப்பற்றி, காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டனர் என எசாயா இறைவாக்கினர் முன்மொழிந்தார் (எசா 9:2). வாக்குத்தவறாக் கடவுள் பேரொளியாகப் பிறந்தார். நம்பிக்கையின் நட்சத்திரம் காட்டும் வழியில் துணிவுடன் முன்னேற கிறிஸ்துமஸ் இன்றும் நம்மை அழைக்கிறது. இடையர்கள் கேட்ட விண்ணவர்களின் மகிழ்ச்சியூட்டும் நம்பிக்கையின் கானம் நம் செவிகளிலும் விழுமாறு செவிகளைக் கூர்மையாக்குவோம். ஆண்டவர் இயேசு தரும் மகிழ்ச்சியும் அமைதியும் உங்கள் இதயங்களில் தங்கிட நான் இறைவனிடம் வேண்டுகிறேன்.

கிறிஸ்துமஸ் மகிழ்ச்சியின் கொண்டாட்டம், அமைதியின் கொண்டாட்டம். மன்னாதி மன்னர் மழலையாய் தொழுவத்தில் பிறந்த மாபெரும் வரலாற்று நிகழ்வை நினைவுகூரும் அருளின் நாள். உறவினர்களோடும், நண்பர்களோடும், அண்டைவீட்டாரோடும், ஏன் அன்னியர்களோடும், நல்லுறவுப் பரிமாறும் புண்ணியம் மிக்க நாள். கிறிஸ்துமஸ் நாளன்று, எதிரிகளை நேசிக்காமல் நம்மால் இருக்க முடியாது. காரணம் இது, மீட்பின் நாள், விடுதலையில் நாள். பாவத்தளைகளை அறுக்கவும், இருளின் விலங்குகளை உடைக்கவும் தரப்பட்ட நன்னாள். எதிரிகளோடும், பகைவர்களோடும் அமைதியைப் ஏற்படுத்திக் கொள்ளும் ஒப்புரவின் நாள். கடவுளைப் புறக்கணித்து, அவருக்கு எதிராக செயல்பட்ட மக்களை அன்பு செய்வதற்காக, இறைமகன் விண்ணகம் விட்டு மண்ணகம் வந்தார். சொந்த மகனையே அளிக்கும் அளவுக்கு உலகின் மீது அன்பு கொண்ட கடவுளின் அன்பைக் கொண்டாடும் கிறிஸ்துமஸ் நாளன்று, இதயங்களை தூயதாக்கி அனைவரையும் நேசிப்போம். அனைவரையும் நேசிக்கும் நற்பண்பை வாழ்வில் வழக்கமாக்குவோம், அதுவே பழக்கமாகட்டும்.

உலகோர் மேல் கடவுள் கொண்ட அன்பை வெளிப்படுத்தும் நாள் கிறிஸ்துமஸ். அவரின் பிறப்பின் வேளையில், மக்கள் மனங்களில் அமைதி பிறந்தது. இதையே வானவர்கள், “உலகில் அவருக்கு

உகந்தோருக்கு அமைதி உண்டாகுக!” (லூக் 2:14) என்று பாடினர். அதுபோலவே, கிறிஸ்துமஸ் விழா, ஒளியின் விழா. இதை அன்றைய வாசகங்கள் உறுதிப் படுத்துகின்றன. தீவனத்தொட்டியில் ஏழையின் உருவில் பிறந்த இயேசு உலகின் ஒளியாக திகழ்ந்தார். இடையர்களை சுற்றி ஒளிவெள்ளம் பரவியது. வானவர்கள், “உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக!” (லூக் 2:14) என்று பாடினர்.

இறைவெளிப்பாட்டின் மகுடமாக அமைந்த இயேசுவின் பிறப்பு, அமைதியின் விழா என வானதூதர்களால் அறிவிக்கப்பட்டது. காரிருளின் மத்தியில் பிரகாசித்த வெளிச்சம் அது. பாபிலோன் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைப் பெற்று வீடு திரும்பிய இஸ்ரயேல் மக்களைப் பார்த்து, நற்செய்தியை அறிவிப்போரின் பாதங்கள் எத்துணை அழகாய் இருக்கின்றன என்று எசாயா கூறினார் (எசா 52: 7-8). பாவத்தின் காரிருளில் வாழ்ந்த மானிடர் மத்தியில், வானதூதர்கள் பேரொளியின் வருகையை அறிவித்தார்கள்.

யோவான் நற்செய்தியாளர், மனிதராகப் பிறந்த வார்த்தையாம் இயேசுவைப் பற்றி மூன்று காரியங்களைக் கூறுகிறார். வார்த்தையான இயேசு கிறிஸ்துவாகிய கடவுள் உலகின் தொடக்கத்தில் இருந்தார். இரண்டாவதாக, அவ்வாக்கு கடவுளோடு இருந்தது என்றுக் குறிப்பிடுகிறார். இதற்கு, அவர் கடவுளோடு நெருக்கமாக இருந்தார் என்பது அர்த்தம். மூன்றாவதாக, வாக்கு கடவுளாக இருந்தது என்று கூறுகிறார். மனிதராகப் பிறந்த இயேசு கடவுளாக இருந்தார் என்பதை யோவான் சுட்டிக் காட்டுகிறார். வாக்கு என்பது ஆற்றல் மிக்கது. அது வெறுமனே ஒரு கருத்தை மட்டும் சொல்வதில்லை. அது, இல்லாதவற்றை உருவாக்கும் படைப்பாற்றல் மிக்கது. கடவுளின் படைப்பாற்றல் மிக்க கடவுளின் வாக்கிலிருந்தே உலகில் உள்ள அனைத்தும் தொடங்கின (யோவா 1:1-15).

வார்த்தையாம் இயேசுவை ஏற்போர் அனைவரும் இறைமக்களாகும் தகுதிப் பெறுகிறார்கள். இறைவனின் அருளாகவும், உண்மையாகவும் விளங்கும் இறைவார்த்தையை கேட்டு வாழ்வின் ஊற்றாகிய அவரை ஏற்றுக் கொள்பவர்கள், இறைமக்களாக மறுப்பிறப்பு எடுக்கிறார்கள். இதையே, நற்செய்தியும் சாட்சியப்படுத்துகிறது. மரியின் வயிற்றில், மனிதரால் அல்ல, மாறாக தூய ஆவியாரின் ஆற்றலால் இயேசு உருப்பெற்றார் (லூக் 1: 26-28). கடவுளின் வார்த்தையை முழுமனதாக ஏற்றுக் கொண்ட மரியா, “நான் ஆண்டவரின் அடிமை; உம்சொற்படியே எனக்கு நிகழட்டும்” (லூக் 1:38) என்று தன்னையே அர்ப்பணித்தார். மரியாவின் இத்தகைய அர்ப்பணிப்பானது, நல்வாழ்விற்கானக் கருவூலம் கடவுளிடமே

உள்ளது என்பதை தெளிவுப்படுத்துகிறது. தன்னுடைய சொந்த மகனை அனுப்பியக் கடவுள், அதன் வழியாக அனைத்து நலன்களையும் மனிதருக்கு அளித்து அவர்கள் தம்முடைய சொந்த மகளாகவும் மகனாகவும் மாறும் வாய்ப்பை அளித்தார். மரியாவைப் போன்று நாம் ஒவ்வொருவரும் இயேசுவை இதயத்தில் ஏற்று, அவருடைய வார்த்தைகளுக்கு உருவம் கொடுக்க அழைக்கப்படுகின்றோம். கடவுளின் வார்த்தைகளுக்கு செவிமடுத்து, அவை வாழ்வில் நிறைவேறுவதற்காக, சுயம் அர்ப்பணம் செய்யும் போது, நாமும் மரியாவைப் போன்று பெரும் பேறுபெற்றவர்களாக மாறுவோம்.

கிறிஸ்துமஸ் விழாவில், மரியாவோடு சேர்ந்து குழந்தை இயேசுவை வரவேற்பதற்காக நம்மையே தயாரிப்போம். அவர் இதயத்தின் வாசலில் நின்று தட்டுகிறார். எளிய மனத்தோரின் மத்தியில் வாழ்ந்திட தன்னையே தாழ்த்தி வருகிறார். தாழ்ந்த மனம் படைத்தோர் அவரை ஏற்கலாம். பல வேளைகளில் நாம் இயேசுவை இதயத்தில் ஏற்றுக் கொண்டாலும், அவர் தங்குவதற்கான வசதிகளை இதயத்தில் ஏற்படுத்திக் கொடுப்பதில்லை என்னும் கசப்பான உண்மை நிலவுகிறது. அதை மாற்றுவோம். இதயத்தில் வாழும் இயேசு நெடுநாள் தங்குவதற்கு ஏற்ற முறையில், இறைவேண்டுதலில் ஆழம் காண்போம், இறைவார்த்தகளுக்கு செவிமடுத்து அவற்றை வாழ்வாக்குவோம். அப்போது நிரந்தரமாக இயேசு நம் இதயங்களில் தங்குவார்.

அன்பான மக்களே, உங்களுக்காகவும் உங்கள் குடும்பங்களுக்காகவும் இறைவனிடம் வேண்டுகிறேன். எனக்காக வேண்டிட உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். மறைமாவட்டத்தின் விரிவாக்கப்பட்டப் பகுதிகளிலும் மறைமாவட்டத்திலும் நடக்கும் அனைத்துப் பணிகளையும் நினைவில் கொண்டு இறையாசீருக்காக வேண்டுங்கள். கிறிஸ்து பிறப்பு விழாவின் நல்வாழ்த்துக்களையும், புத்தாண்டின் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இறைவன் உங்களையும், உங்கள் குடும்பங்களையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

**ஆயர் இல்லம்**

**12.12.2022**

BISHOP GEORGE RAJENDRAN sdb * Diocese of Thuckalay *

**என்றும் ஈசோ மெசியாவில்**

மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB

**தக்கலை மறைமாவட்ட ஆயர்**

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

# மறைமாவட்ட முதல் மாமன்றத்திற்கான அழைப்பு ஆணை

அருட்தந்தையர் பேரவை, மறைமாவட்ட பிற ஆலோசனைக் குழுக்கள் ஆகியவற்றின் ஆலோசனைகளைப் பெற்றப்பிறகு, தக்கலை மறைமாவட்டத்தின் ஆயரான நான், ஜார்ஜ் இராஜேந்திரன் ச.ச, கீழைத்திரு அவைகளுக்கான திருச்சட்டங்கள் 235 முதல் 242 ஆகியவற்றிற்கு ஏற்ப (Codex Canonum Ecclesiarm Orientalium, CCEO) மறைமாவட்ட முதல் மாமன்றம் கூடுவதற்கான அழைப்பை ஆணையாக விடுக்கிறேன். இம்மாமன்றமானது, 2023 செப்டம்பர் 28 முதல் 30 வரை தக்கலையில் அமைந்துள்ள, மறைமாவட்ட மேய்ப்புப்பணி மற்றும் உயிரூட்டல் மையமான சங்கமத்தில் வைத்து நடைபெறும்.

இறைமக்களின் கூட்டமே திரு அவை என்பதை இம்மாமன்றம் வெளிப்படுத்துகிறது. திருஅவையின் உறுப்பினர்களாகிய நம்பிக்கையாளர் ஒவ்வொருவரும் தத்தம் நிலைக்கு ஏற்ப கிறிஸ்துவின் முப்பணிகளாகிய போதிக்கும் பணி, புனிதப்படுத்தும் பணி, ஆளும் பணி ஆகியவற்றில் பங்கேற்கிறார்கள். இம்மாமன்றம், மறைமாவட்டப் பணிகளுக்கு புத்துயிர் ஊட்டிப் புதுப்பிக்கும் நோக்கத்தைக் கொண்டதாக, "மறைமாவட்டத்தின் சிறப்புத் தேவைகள் அல்லது அதன் நலனைப் பேணும் பொருட்டு ஆயர் அவர்களுக்கு உதவும் பொருட்டுக் கூட்டப்படுகிறது" (சட்டம். 235, CCEO).

கடந்து வந்தப் பாதையை ஆய்வுக்கு உட்படுத்தி இன்றைய உலகம் முன்வைக்கும் சவால்களை எதிர்கொள்ள, இறைமக்கள் மாமன்றம் அவசியம் என்பதை உணர்ந்து இதற்கான அழைப்பை விடுக்கிறேன். ஆக, இது சுய ஆய்விற்கு ஏற்ற நேரம், வருங்காலத்திற்கான திட்டங்களை வகுப்பதற்கான நேரம். நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நற்செய்திப் பணிகளை மறைமாவட்டத்தில் அதிக செயலூக்கத்துடன் பயன்மிக்க முறையில் முன்னெடுப்பதற்கான திட்டங்களை வகுப்பதற்கான நேரம்.

அன்பான இறைமக்களே, (குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினரை உள்ளடக்கிய), மறைமாவட்டத்தின் இம்மாபெரும் நிகழ்வுக்கு உங்களுடைய நிகரற்ற பங்களிப்பை அளிக்க அன்போடு அழைக்கிறேன். இறைவேண்டுதல், எதிர் காலத்திற்கானப் புதுப்பார்வைகள், ஆக்கப்பூர்வமான பங்கேற்பு ஆகியவற்றால் உங்களுடைய முழுப் பங்களிப்பை அளித்து இந்நிகழ்வை பயன்மிக்கத்தாக்க வேண்டுகிறேன்.

2022, டிசம்பர் 8 ஆம் தேதி, இறையன்னையின் அமலோற்பவத் திருநாளன்று, தக்கலை ஆயர் – இல்லத்திலிருந்து இது வெளியிடப்படுகிறது. மறைமாவட்ட முதல் மாமன்றத்திற்கான அழைப்பு ஆணை

அருட்தந்தையர் பேரவை, மறைமாவட்ட பிற ஆலோசனைக் குழுக்கள் ஆகியவற்றின் ஆலோசனைகளைப் பெற்றப்பிறகு, தக்கலை மறைமாவட்டத்தின் ஆயரான நான், ஜார்ஜ் இராஜேந்திரன் ச.ச, கீழைத்திரு அவைகளுக்கான திருச்சட்டங்கள் 235 முதல் 242 ஆகியவற்றிற்கு ஏற்ப (Codex Canonum Ecclesiarm Orientalium, CCEO) மறைமாவட்ட முதல் மாமன்றம் கூடுவதற்கான அழைப்பை ஆணையாக விடுக்கிறேன். இம்மாமன்றமானது, 2023 செப்டம்பர் 28 முதல் 30 வரை தக்கலையில் அமைந்துள்ள, மறைமாவட்ட மேய்ப்புப்பணி மற்றும் உயிரூட்டல் மையமான சங்கமத்தில் வைத்து நடைபெறும்.

இறைமக்களின் கூட்டமே திரு அவை என்பதை இம்மாமன்றம் வெளிப்படுத்துகிறது. திருஅவையின் உறுப்பினர்களாகிய நம்பிக்கையாளர் ஒவ்வொருவரும் தத்தம் நிலைக்கு ஏற்ப கிறிஸ்துவின் முப்பணிகளாகிய போதிக்கும் பணி, புனிதப்படுத்தும் பணி, ஆளும் பணி ஆகியவற்றில் பங்கேற்கிறார்கள். இம்மாமன்றம், மறைமாவட்டப் பணிகளுக்கு புத்துயிர் ஊட்டிப் புதுப்பிக்கும் நோக்கத்தைக் கொண்டதாக, "மறைமாவட்டத்தின் சிறப்புத் தேவைகள் அல்லது அதன் நலனைப் பேணும் பொருட்டு ஆயர் அவர்களுக்கு உதவும் பொருட்டுக் கூட்டப்படுகிறது" (சட்டம். 235, CCEO).

கடந்து வந்தப் பாதையை ஆய்வுக்கு உட்படுத்தி இன்றைய உலகம் முன்வைக்கும் சவால்களை எதிர்கொள்ள, இறைமக்கள் மாமன்றம் அவசியம் என்பதை உணர்ந்து இதற்கான அழைப்பை விடுக்கிறேன். ஆக, இது சுய ஆய்விற்கு ஏற்ற நேரம், வருங்காலத்திற்கான திட்டங்களை வகுப்பதற்கான நேரம். நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நற்செய்திப் பணிகளை மறைமாவட்டத்தில் அதிக செயலூக்கத்துடன் பயன்மிக்க முறையில் முன்னெடுப்பதற்கான திட்டங்களை வகுப்பதற்கான நேரம்.

அன்பான இறைமக்களே, (குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினரை உள்ளடக்கிய), மறைமாவட்டத்தின் இம்மாபெரும் நிகழ்வுக்கு உங்களுடைய நிகரற்ற பங்களிப்பை அளிக்க அன்போடு அழைக்கிறேன். இறைவேண்டுதல், எதிர் காலத்திற்கானப் புதுப்பார்வைகள், ஆக்கப்பூர்வமான பங்கேற்பு ஆகியவற்றால் உங்களுடைய முழுப் பங்களிப்பை அளித்து இந்நிகழ்வை பயன்மிக்கத்தாக்க வேண்டுகிறேன்.

2022, டிசம்பர் 8 ஆம் தேதி, இறையன்னையின் அமலோற்பவத் திருநாளன்று, தக்கலை ஆயர் – இல்லத்திலிருந்து இது வெளியிடப்படுகிறது.

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

ஜார்ஜ் இராஜேந்திரன் ச ச
தக்கலை மறைமாவட்ட ஆயர்

அருட்தந்தை ஜோஷி குளத்துங்கல்
ஆவணக்காப்பாளர்

# மறைமாவட்ட சூரியா செய்திகள்

அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில் மருத்துவ சிகிச்சை பெற்று வருகிறார், அவர் இல்லாத நேரத்தில் அருட்தந்தை செபி பிலாங்கரை பங்கின் பொறுப்பில் இருப்பார்.

பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் மூலமற்றம் சினேகவில்லாவின் இயக்குநராக ஒருமாத காலம் 2023 ஜனவரி 08 முதல் செயல்படுவார்.

அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில் சுகாதார ஆணையத்தின் இயக்குநர் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

அருட்தந்தை மகேஷ் ஆண்டனி சுகாதார ஆணையத்தின் புதிய இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அருட்தந்தை ஜினோய் தொட்டியில் மூலமற்றம், சினேகவில்லாவின் இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் திருநெல்வேலியிலும் தனது பணியைத் தொடர்வார்.

பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துபறம்பில், அருட்தந்தை சாஜன் நெட்டபொங்கு மற்றும் அருட்தந்தை சுமேஷ் வெள்ளியாம்தடத்தில் ஆகியோர் மூலமற்றம் சினேவில்லா நிர்வாகக் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

*அன்பானவர்களே...*

**இறையருள் செய்திகள் மற்றும் படங்களை *iraiarultkly@gmail.com* என்ற மின்னஞ்சல் முகவரிக்கு பிரதி மாதம் 02 ம் தேதிக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்**



# CATECHISM மறைக்கல்வி

"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்."
(மாற் 16:15)

***கடவுளது சாயலாக படைக்கப்பட்ட புதிய மனிதருக்குரிய இயல்பை அணிந்து கொள்ளுங்கள். அவ்வியல்பு உண்மையான நீதியிலும் தூய்மையிலும் வெளிப்படும். [எபே 4:24]***

அனைவருக்கும் இனிய கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு மறைக்கல்வி மாணவர்களை ஆயத்தப்படுத்தும் நோக்குடன் வகுப்பு 4 முதல் 12-ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு 25 நாட்கள் விவிலியத்தை மையமாக கொண்ட செயல்கள் வழங்கப்பட்டன. அவை அனைத்தும் "குழந்தை ஈசோவுக்கு என் அன்பு பரிசு" என்னும் தலைப்பில் தாளில் அச்சிடப்பட்டு அனைத்து மறைக்கல்வி நிலைய மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது. அதில் ஒவ்வொரு நாளும் வாசிக்க வேண்டிய விவிலிய வசனம், சிறு செபம் செபக்கருத்து, நற்செயல், பரிசு ஆகியவை கொடுக்கப்பட்டது.

### *மறைவட்ட செயலர்களின் கூட்டம்*

நமது மறைக்கல்வி நிலைய மறைவட்ட செயலர்களின் கூட்டமானது டிசம்பர் 11 ஞாயிற்றுக்கிழமையன்று பிற்பகல் 2.30 மணிக்கு இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் அவர்களின் தலைமையில் படந்தாலுமூடு திருஇருதய ஆலய பள்ளிக்கூடத்தில் வைத்து செபத்துடன் ஆரம்பமானது. அருட்தந்தை அவர்கள் விவிலியக் கலைவிழா போட்டிகள் எவ்வாறு நடக்க வேண்டும், என்னென்ன செய்ய வேண்டும் என்பது பற்றி தெளிவாக எடுத்துக் கூறினார். மேலும் போட்டிகளில் பங்கேற்கு மாணவர்களின் பெயர் பட்டியல் மற்றும் போட்டிகள் நடத்த தேவையான அனைத்து ஆவணங்களும் மறைவட்ட செயலரிடம் வழங்கப்பட்டது. பின்னர் சுமார் 4.30 மணியளவில் தேநீர் விருந்துடன் கூட்டமானது இனிதே முடிவுற்றது.

### *கிறிஸ்மஸ் விழா கூட்டம்*

நமது மறைக்கல்வி தலைமையாசிரியர்கள், ஊக்குவிப்பாளர்கள், மறைவட்ட செயலர்கள், மறைக்கல்வியின் செயலர், மாணவர்களின் தலைவர்கள், மற்றும் அலுவலக பணியாளர்களின் கிறிஸ்மஸ் விழா கொண்டாட்டம் டிசம்பர் 17 பிற்பகல் 2.30 மணிக்கு நித்திரவிளை, ஜெயமாதா மறைவட்ட ஆலய அமலா அரங்கில்

வைத்து இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் அவர்களின் தலைமையிலும், சிறப்பு விருந்தினர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் மற்றும் நித்திரிவிளை மறைவட்ட இயக்குநர் அருட்தந்தை அனில்ராஜ் ஆகியோரின் முன்னிலையில் கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாடப்பட்டது. நிகழ்வின் துவக்கமாக நித்திரவிளை மறைக்கல்வி மாணவிகள் இறைவணக்கப் பாடல் பாடினர். அருட்சகோதரி. ப்ரீதா தெரேஸ் SH அவர்கள் விவிலியம் வாசித்து செபம் செய்தார்கள். தொடர்ந்து இயக்குநர் அருட்தந்தை அவர்கள் வருகை புரிந்த அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார். பின்னர் மறைக்கல்வி மாணவிகள் கிறிஸ்மஸ் வாழ்த்துப் பாடல் பாடினர். தொடர்ந்த சிறப்பு விருந்தினராக வருகைப் புரிந்த பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாடும் இத்தருணத்தல் அனைவரும் அன்பு, இரக்கம், தாழ்ச்சி ஆகிய நற்பண்புகளை கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்று உரையாற்றி கேக் வெட்டி கிறிஸ்து பிறப்பு விழா மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்களை



தெரிவித்தார். நிகழ்வின் இடையே மறைக்கல்வி மாணவிகளின் அழகிய நடனம் நடைபெற்றது. தொடர்ந்து அருட்தந்தை அனில்ராஜ் அவர்கள் சிற்றுரையாற்றி அனைவருக்கும் கிறஸ்மஸ் வாழ்த்துக்களை தெரிவித்தார். தொடர்ந்து இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் அவர்கள் மறைவட்ட கலைப்போட்டிகள் நடக்கும் நாட்கள், போட்டிகளைப் பற்றிய அரங்கு, விதிமுறைகள், காலஅட்டவணை ஆகியவற்றை தொகுத்து கூறினார். நற்செய்தி நிலையத்தின் சார்பாக அனைவருக்கும் வாழ்த்துக்கள் தெரிவிககப்பட்டது. பரிசாக டயரி, பேனா மற்றும் இயேசுவின் படம் அடங்கிய மெட்டி வழங்கப்பட்டது. பின்னர் இயக்குநரின் உரையுடன் கிறிஸ்மஸ் விழா கூட்டம் இனிதே நிறைவுற்றது. அனைத்து நிகழ்வுகளையும் ஊக்குவிப்பாளர் திரு. ஷோணிக் ரீகன் அவர்கள் தொகுத்து வழங்கினார். இறுதியில் அனைவருக்கும் கிறிஸ்மஸ் கேக் மற்றும் தேநீர் விருந்து வழங்கப்பட்டது.

## *விவிலியக் கலைவிழா மறைவட்டப் போட்டிகள்*

2022-2023 ஆம் மறைக்கல்வி ஆண்டு விவிலியக் கலைவிழா மறைவட்டப் போட்டிகள் டிசம்பர் 27 செவ்வாய்கிழமை ஆறுகாணி மற்றும் மஞ்சாலுமூடு, டிசம்பர் 28 புதன்கிழமை, தக்கலை பிலாங்காலை மற்றும் சூசைபுரம் மறைவட்டங்களுக்கும் டிசம்பர் 29 வியாழக்கிழமை நித்திரவிளை மற்றும் படந்தாலுமூடு, டிசம்பர் 30 அன்று வெள்ளிக்கிழமை களியல் ஆகிய மறைவட்டங்களுக்கும் மறைவட்ட இயக்குநர்கள் அருட்தந்தையர்களின்





தலைமையில் நடைபெற்றது. போட்டிகள் அனைத்தும் காலை 87-.30 மணிக்கு பெயர் பதிவுடன் ஆரம்பமாகி 9.30 மணிக்கு துவக்க விழாவும் நடைபெற்றது. விவிலியக் கலைப் போட்டிகள் அனைத்தும் காலை 10 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4.30 மணி வரை 5 அரங்குகளில் வைத்து நடைப்பெற்றது. நிறைவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. விவிலியக் கலைவிழா போட்டிகள் நடைபெறும் நாட்களில் மஞ்சாலுமூடு மற்றும் தக்கலை-பிலாங்காலை மறைவட்டங்களில் நமது பாசமிகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் வருகை புரிந்தது அனைவருக்கும் உற்சாகத்தையும், ஊக்கத்தையும் அளித்தது. விவிலியக் கலைவிழா மறைவட்ட போட்டிகள் மிகச் சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த மறைவட்ட ஒருங்கிணைப்பாளர்களான பேரருட்தந்தை ஆன்டணி ஜோஸ், அருட்தந்தை மார்டின் MST, அருட்தந்தை ஷிஜோ, அருட்தந்தை மகேஷ், அருட்தந்தை அனில் ராஜ், அருட்தந்தை அஜின், அருட்தந்தை லூக்கா CMI மற்றும் மறைவட்ட செயலர்கள் அருட்சகோதரிகள் லின்ஸ் SABS, அனிதா SH, ஆனி லின்ஸ் CMC, லிசி மேத்தியு SH, எல்சீனா ASMI, ஷெரின் CMC, ஜோதிஸ் FCC ஆகியோர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்

Bible Fest 2022-2023

Forane Level Students Competition Rank list

| Parish | Score | Rank |
|---|---|---|
| Arukany Forane | | |
| Arukany | 126 | I |
| Netta | 107 | II |
| Pathukany | 93 | III |
| Mezhacode | 67 | IV |
| Penuthadam | 40 | V |
| Anamugham | 1 | VI |
| Kaliyal Forane | | |
| Marappady | 109 | I |
| Kaliyal | 99 | II |
| Pallikkonam | 85 | III |
| Karode | 80 | IV |
| Kulasekharam | 51 | V |
| Chenamcode | 9 | VI |
| Manjalumoodu Forane | | |
| Muzhucode | 113 | I |
| Malaicode | 98 | II |
| Manjalumoodu | 88 | III |
| Mukkoottukkal | 80 | IV |
| Thettivilai | 34 | V |
| Kuttaicode | 18 | VI |
| Bengiri | 3 | VII |
| Padanthalumoodu Forane | | |
| Padanthalumoodu | 107 | I |
| Annikkarai | 94 | II |
| Palugal | 89 | III |
| Kazhuvanthittai | 68 | IV |
| Athencode | 26 | V |
| Thettiyode | 25 | VI |

| | | |
|---|---|---|
| Marthandam | 12 | VII |
| Kunnuvilai | 6 | VIII |
| Kallukatti | 1 | IX |
| Nithiravilai Forane | | |
| Nithiravilai | 109 | I |
| Varuthattu | 105 | II |
| Vayalinkarai | 95 | III |
| Cheenivilai | 53 | IV |
| Munchirai | 48 | V |
| Christurajapuram | 22 | VI |
| Soosaipuram Forane | | |
| Soosaipuram | 123 | I |
| Palappallam | 116 | II |
| Mangarai | 88 | III |
| Killiyoor | 46 | IV |
| Thackalivilai | 26 | V |
| Pilankarai | 17 | VI |
| Fathimapuram | 17 | VII |
| Mathapuram | 1 | VIII |
| Thuckalay - Pilankalai Forane | | |
| Kattathurai | 93 | I |
| Thuckalay | 85 | II |
| Pilankalai | 83 | III |
| Nagercoil | 68 | IV |
| Paraicode | 39 | V |
| Neethipuram | 25 | VI |
| Kalluvilai | 19 | VII |
| Kaisalavilai | 16 | VIII |
| Anayadi | 6 | IX |

அருட்தந்தை. ஜேக்கப் ஐயம்மாத்ற
இணை இயக்குநர்

அருட்தந்தை.அபிலாஷ் சேவியர்
இயக்குநர்

HOLY CHILDHOOD
குழந்தை ஈசோ

# குழந்தை ஈசோ இயக்கம்

## *கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்*

குழந்தை ஈசோ இயக்கத்தின் கிறிஸ்துமஸ் கொண்டாட்டமானது, *17.12.2022* சனிக்கிழமை மதியம் *1.30* மணிக்கு நித்திரவிளை அமலா ஆடிட்டோரியத்தில் வைத்து பொறுப்பாளர்களின் கூட்டம் இயக்குநர் தந்தை தலைமையில் நடைபெற்றது. CMC அருட்சகோதரிகள் இறைவணக்கம் பாடினர். அருட்சகோதரி ஜியோ மரியா SABS அனைவரையும் வரவேற்றுப்பேசினார். நித்திரவிளை மறைவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம்



அவர்கள் கிறிஸ்துமஸ் கேக் வெட்டி வாழ்த்துச் செய்தி கூறினார். இயக்குநர் தந்தை பொறுப்பாளர்கள் அனைவருக்கும் குழந்தை ஈசோ இயக்கத்தை சிறந்த முறையில் வழிநடத்தி செல்வதற்கு நன்றிகளையும் வாழ்த்துக்களையும் கூறினார். மேலும் வரவிருக்கும் நிகழ்வுகள் மற்றும் கலைவிழா பற்றிய அறிவிப்புகளை கூறினார். இறுதியில் அருட்சகோதரி அபிஷா மரியா FCC அனைவருக்கும் நன்றி கூறினார்.

*31.12.2022* சனிக்கிழமை காலை *10* மணி முதல் மதியம் *1* மணி வரை செயற்குழு கூட்டம் கல்லுவிளை அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது.

இப்படிக்கு
அருட்தந்தை அனில் ராஜ்
இயக்குநர்

## சீரோ மலபார் இளையோர் இயக்கம் SMYM

### *கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் மற்றும் ஆண்டுவிழா*

தக்கலை மறைமாவட்டம் சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் 2022 டிசம்பர் 18 அன்று தெற்றியோடு ஆசீர் வித்யாலயா பள்ளி வளாகத்தில் மதியம் 1.30 மணியளவில் பெயர் பதிவுடன் ஆரம்பமானது. படந்தாலுமூடு ஆலய SMYM உறுப்பினர்கள் இறைவணக்கம் பாடினர். தொடர்ந்து 'கருத்தும் கானமும்' பாடல் போட்டி நடைபெற்றது. இடையிடையே போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட குறும்படங்கள் ஒளிபரப்பபட்டன. மாலை 4.30 மணியளவில் ஆண்டுவிழா ஆரம்பமானது. மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமை தாங்கினார். கழுவன்திட்டை ஆலய SMYM உறுப்பினர்கள் வரவேற்பு நடனம் ஆடினர். அண்ணிக்கரை ஆலய SMYM உறுப்பினர் கிரண் அனைவரையும் வரவேற்று பேசினார். சிறப்பு விருந்தினர்கள் குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சிகளை தொடங்கிவைத்தனர். மறைமாவட்ட ஆலோசகர் ஜெனிஷா அறிக்கை சமர்பித்தார். படந்தாலுமூடு மறைவட்ட இயக்குநர் அருட்தந்தை சுமேஷ் தொடக்கவுரை வழங்கினார். தொடர்ந்து மறைமாவட்ட துணைச்செயலர் மெர்னிஷா வாழ்த்துரையாற்றினார். தொடர்ந்து ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையுரை வழங்கினார். இடையிடையே படந்தாலுமூடு மறைவட்ட இளையோர்களின் கலைநிகழ்ச்சிகள் மற்றும் JESUS DREAMZ Music Band ன் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இணையவழி பொங்கல் போட்டி மற்றும் கிறிஸ்துமஸ் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

கிறிஸ்துமஸ் போட்டிகளில் வெற்றி பெற்றோர்களின் விவரம்

| குறும்பட போட்டி | |
|---|---|
| முதல் பரிசு | புனித ஜாண்பால் அலகு, குலசேகரம் & புனித லூர்து அன்னை அலகு, சேனங்கோடு |
| இரண்டாம் பரிசு | புனித அந்தோணியார் அலகு – வயலின்கரை |
| மூன்றாம் பரிசு | கிறிஸ்து அரசர் அலகு - கிறிஸ்துராஜபுரம் |

| ‘கருத்தும் கானமும்’ பாடல் போட்டி | |
|---|---|
| முதல் பரிசு | புனித மார்டின் டி போரஸ் அலகு - கழுவன்திட்டை |
| இரண்டாம் பரிசு | புனித சவேரியார் அலகு – வாறுதட்டு |
| மூன்றாம் பரிசு | புனித மிக்கேல் அலகு – தெற்றிவிளை |

இறுதியில் வளன்நகர் ஆலய SMYM உறுப்பினர் அனிதா அனைவருக்கும் நன்றி கூறினார். மறைமாவட்ட பொறுப்பாளர்கள் அஞ்சனா மற்றும் ஜாஸ்மின் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினர். இந்நிகழ்ச்சிகளில் சுமார் 300 இளையோர்கள் பங்குகொண்டனர், ‘கருத்தும் கானமும்’ பாடல் போட்டியில் 19 குழுக்களும், குறும்பட போட்டியில் 5 குழுக்களும் பங்கேற்றனர்.

***ஆயருடன்...***

தக்கலை மறைமாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்க இயக்குநர் மற்றும் நடுவண் செயற்குழு உறுப்பினர்கள் இணைந்து 2022 டிசம்பர் 24 சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் தக்கலை ஆயர் இல்லத்தில் மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB மற்றும் குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவ்வத்துபறம்பில் ஆகியோரை சந்தித்து கிறிஸ்துமஸ் வாழ்த்து செய்திகளை தெரிவித்துக்கொண்டனர், ஆயர் அவர்கள் அனைவருக்கும் இனிப்பு மற்றும் பரிசு பொருட்களை வழங்கினார்.



***Youth Friends Meet***

தக்கலை மறைமாவட்டம் சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் 2018 முதல் 2021 வரையிலான காலகட்டங்களில் மறைமாவட்ட நடுவண் செயற்குழு உறுப்பினர்களாக செயல்பட்ட பொறுப்பாளர்களின் நட்புவழி சந்திப்பு நிகழ்சி 2022

டிசம்பர் 27 செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு கல்லுவிளை SMYM அலுவலகத்தில் நடைபெற்றது. மறைமாவட்ட இணைத்தலைவர் ஜாஸ்மின் அனைவரையும் வரவேற்று பேசினார். இயக்குநர் அருட்தந்தை.ஜோசப் சந்தோஷ் அவர்கள் இளையோர்களின் தற்போதைய சூழல்கள் குறித்து கருத்துக்கள் வழங்கினார். தொடர்ந்து ஒவ்வொருவரும் தங்களுடைய அனுபவங்களை பகிர்ந்துகொண்டனர். இடையில் காணொலி மூலம் முன்னால் இயக்குநர் அருட்தந்தை பெலிக்ஸ் SDB வாழ்த்துரை வழங்கினார். அனைவருக்கும் பரிசு பொருட்கள் வழங்கப்பட்டது, இறுதியில் மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் கலந்து கொண்டு, ஆசியுரை வழங்கினார். JESUS DREAMZ Music Band ன் இசை நிகழ்ச்சி மற்றும் வேடிக்கை விளையாட்டுகள் இந்நிகழ்வை மெருகூட்டுவதாக அமைந்தது. இறுதியில் மறைமாவட்ட செயலர் மெரின் சுஜித் அனைவருக்கும் நன்றி கூறினார். மறைமாவட்ட பொறுப்பாளர்கள் மெர்பின் மற்றும் அஜித் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினர். அனைவருக்கும் மெழுகுவர்த்தி இரவு உணவு ஏற்பாடு செய்யபட்டிருந்தது. ஆயர் அவர்கள் இளையோர்களுடன் இணைந்து உணவு உண்டது சிறப்பு மிக்க நிகழ்வாக இருந்தது.



***ஜீஸஸ் ட்ரீம்ஸ் இசைக்குழு***

தக்கலை சீரோ மலபார் இளையோர் இயக்கத்தில் செயல்படும் இயேசுவின் கனவு இசைக்குழுவின் இசைநிகழ்ச்சி நடைபெற்றது, 2022 டிசம்பர் 29 அன்று தக்காளிவிளை ஆலயத்தில் நடைபெற்ற முதல் திருவிருந்து நிகழ்ச்சியில் நமது இளையோர்கள் இசைநிகழ்ச்சியை நடத்தினர்.

**இவண்**
**மெரின் சுஜித், செயலர்**




***உழைத்தவன் அறிவான் உழைப்பின் அருமை அது தான் அவன் உயர்வுக்கு பெருமை நல்லதையே நினைப்போம் உதவிகள் செய்வோம் மானுடம் வாழ மனிதநேயம் காப்போம் பொல்லா காலம் போனதென்றே நினைத்து நல்ல காலம் பிறந்ததென்றே வாழ்வோம். இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.***

### *இல்வாழ்வு இயக்கம்*

தந்தை மகன் தூய ஆவியின் பெயரால் தொடங்கட்பட்ட திருமண வாழ்வானது அன்னை மரியாவின் தூய எண்ணங்கள் மற்றும் இறைவனிடம் கொண்டிருந்த விசுவாசத்தை போல குடும்ப வாழ்வு அமைய வேண்டும் என்ற நோக்குடன் இவ் இயக்கம் குடும்பங்களுக்கு வழிகாட்டியாக திகழ்கிறது.

***Counselling Service:*** இவ்வேளையில் மக்களுக்கு ஆறுதல்களும், அறிவுரையும் தேவை. இந்நோக்குடன் எமது அலுவலகத்தில் அருள் கொடை பெற்ற அருள்தந்தை மற்றும் கன்னியர்களாலும் ஆலோசனையும், அறிவுரையும் கொடுக்கபட்டு வருகிறது. மேலும் குடிநோய் மற்றும் மனநோயாளிகளுக்கு மருத்துவரின் ஆலோசனைகளும், சிகிட்சையும், மருந்துகளும் வழங்கபடுகிறது. டிசம்பர் 5 மற்றும் 19 ம் தேதி டாக்டர் அவர்கள் வருகை புரிந்தார். அன்றைய தினங்களில் சுமார் 38 நோயாளிகள் பயன் அடைந்தனர்.

### *மாதர் ஜோதிஸ் இயக்கம்*

மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பாக உணவுத் திருவிழா டிசம்பர் 5 ம் தேதி ஆசீர் ஆடிட்டோரிய வளாகத்தில் வைத்து காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை நடைபெற்றது. இப்போட்டியில் 81 தாய்மார்கள் வித விதமான உணவுப் பொருட்களைகொண்டு வந்து காட்சிப்படுத்தினர். உணவுத் திருவிழாவை பார்வையிட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துபறம்பில் மற்றும் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் வருகைப்புரிந்து உணவு வகைகளை பார்வையிட்டார். உணவின் தரம் மற்றும் சுவையின் அடிப்படையில் பரிசுகள் வழங்கப்பட உள்ளது. இதில் 28 தாய்மார்கள் மறைமாவட்ட அளவில் முதலிடத்தையும் 28 தாய்மார்கள் மறைமாவட்ட அளவில் இரண்டாவது

இடத்தையும் 18 தாய்மார்கள் மறைமாவட்ட அளவில் மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளார்கள். அவர்களுக்கு மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பாக வாழ்த்துகளை தெரிவித்து கொள்கின்றோம். Smart Christmas சிறு சேமிப்பு திட்டத்தில் கழிந்த ஆண்டு பணம் சேமித்த 281 தாய்மார்களுக்கு டிசம்பர் 17 ம் தேதி காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை பணம் வழங்கப்பட்டது. பணம் சேமித்த தாய்மார்களுக்கு 5000 ருபாய் மற்றும் Cake வழங்கப்பட்டது. ஒரு நபர் 10 க்கும் மேற்பட்ட நபர்களிடமிருந்து பணம் பிரித்து அலுவலகத்தில் ஒப்படைத்த நபருக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டது.

### கரோல் குழு பாடல் போட்டி

கரோல் குழு பாடல் போட்டியானது 17-12-2022 இல்வாழ்வு இயக்கம் கல்லுவிளையில் வைத்து மாதர் ஜோதிஸ் தாய்மார்களுக்கு நடத்தப்பட்டது. இதில் 32 பங்குகளில் இருந்து சுமார் 32 குழுக்கள் போட்டியில் பங்கேற்றனர். இப்போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு மறைவட்ட அளவில் பரிசுகள் வழங்கப்படும். இவர்களுக்கு மாதர் ஜோதிஸ் ஆண்டுவிழாவின் போது பரிசுகள் வழங்கப்படயுள்ளது.

### Christmas Gathering

மாதர் ஜோதிஸ் தாய்மார்களுக்கான கிறிஸ்துமஸ் கூட்டம் . இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் வைத்து டிசம்பர் 17 ம் தேதி மதியம் 2.15 மணியளவில் தொடங்கப்பட்டது. இக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக குருகுல முதல்வர் பேரருட்தந்தை.தோமஸ் பவத்துபறம்பில் அவர்கள் வருகைப்புரிந்தார்கள். இறைவணக்க நடனத்தை மாதர் ஜோதிஸ் பெறுப்பாளர்கள் ஆடினார்கள். பேரருட்தந்தை.தோமஸ் பவத்துபறம்பில் கிறிஸ்துமஸ் கேக் வெட்டி அனைவருக்கும் பகிர்ந்து அளித்தார். அப்போது பேசுகையில் மாதர் ஜோதிஸ் இயக்கம் வளர்ச்சியடைந்துள்ளது என்றும் மேலும் வளர்சியடைய தாய்மார்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று கூறினார்கள். பின்னர் திருமதி ஜீலிட் சுனில் அவர்கள் Theme மற்றும் வருகின்ற போட்டிகள் குறித்து தாய்மார்களுக்கு கூறினார். மேலும் இயக்குநர் தந்தை அவர்கள் Smart Christmas Savings



scheme குறித்து கூறினார்கள். டிசம்பர் 2022 முதல் வாரந்தோறும் 100 ரூபாய் வீதம் 50 வார சேமிப்பு திட்டம், கட்டின தொகை மற்றும் Gift சேர்த்து 2023 டிசம்பர் கிறிஸ்துமஸ் Gathering அன்று வழங்கப்படும். இத்திட்டத்தில் மாதர் ஜோதிஸ் தாய்மார்கள் பங்கேற்கலாம். இவ்விழாவில் சுமார் 90 ஆனிமேட்டாஸ் கலந்து கொண்டனர். சுமார் 4 மணியளவில் விழா நிறைவுற்றது.

***திருமண ஆயத்தப் பயிற்சி***

திருமண ஆயத்தப் பயிற்சி வகுப்பானது 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் இல்வாழ்வு இயக்கம் கல்லுவிளையில் வைத்து நடைபெற்றது. இப்பயிற்சி வகுப்பின் இரண்டாவது நாள் வகுப்பினை பார்வையிட பேரருட்தந்தை தோமஸ் பவத்துபறம்பில் அடிகளார் வருகைப்புரிந்து மாணவர்களை பார்வையிட்டு கிறிஸ்துமஸ் cake யை வெட்டி கிறிஸ்துமஸ் விழா கொண்டாடப்பட்டது. மேலும் பேரருட்தந்தை அவர்கள் மாணவர்களுக்கு பயிற்சி வகுப்பின் சான்றிதழை வழங்கினார்கள். இப்பயிற்சி வகுப்பில் 24 இளைஞர்கள் பங்கேற்று பயன் அடைந்தார்கள்.

***அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்***

***இயக்குநர்***

# வரவிருக்கும் நிகழ்வுகள்

Erection of Mission Parish, Kuttaicode – ஜனவரி 03

சீரோ மலபார் ஆயர் மாமன்றம், காக்கநாடு – ஜனவரி 06 – 14

சீரோ மலபார் திருத்தொண்டு வாரம் - ஜனவரி 06 – 12

மறைவட்ட அருட்தந்தையர் கூட்டம்

(சூசைபுரம், தக்கலை பிலாங்காலை தவிர) - ஜனவரி 10

அருட்தந்தையர்கள் தியானம், கல்லுவிளை - ஜனவரி 17

தென்காசி மறைபரப்பு தள வெள்ளி விழா நிறைவு - ஜனவரி 22

சிறுமலர் பவள விழா கொண்டாட்டம், கல்லுவிளை - ஜனவரி 29




# வின்சென்ட்-தே-பவுல் சபை

### *முப்பெரும் விழா - ஆசாரிபள்ளம்*

தக்கலை மத்திய பேரவை புனித வின்சென்ட் தே பவுல் சபையின் ஆண்டு விழா மற்றும் வெள்ளி விழா, விடியல் அருள் அவை நடுவம் (VAAN) கட்டிடம் திறப்பு விழா என்று முப்பெரும் விழாவாக 11.12.2022 அன்று ஆசாரிபள்ளம் VAAN கட்டிடத்தில் வைத்து நடைபெற்றது. நிகழ்வில் மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் கட்டிடத்தை (VAAN) திறந்து வைத்து திருப்பலி நிறைவேற்றினார்கள். தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வில் ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை பௌவத்துபறம்பில், இந்திய தேசிய சபை தலைவர் சகோ.ஜூடு மங்கள் ராஜ், இந்திய தேசிய சபை செயலர் சகோ. சந்தியாகு மாணிக்கம் மற்றும் தமிழ்நாடு மண்டல சபை ஒருங்கிணைப்பாளர் சகோ.வெள்ள துரை ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். பின்னர் தென்காசி வட்டார சபை உருவாக்கத்திற்கான ஆணையும் ஆயர் அவர்களால் வெளியிடப்பட்டது. புனித அல்போன்சா திருத்தல அதிபர். அருட்தந்தை சனல் பந்திச்சிறக்கல் அவர்களின் மேற்பார்வையில் மத்திய சபை தலைவர் சகோ.றாபி, துணை தலைவர் சகோ. ஐயாத்துரை வழிகாட்டுதலின்படி வின்சென்டிய சகோதரர்கள் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து வழிநடத்தினார்கள். வின்சென்டியர்களின் நினைவில் வாழும் திரு. சௌந்தர்ராஜ் அவர்களின் முயற்சியல் உருவான VAAN கட்டிடம் 14.2.2021 அன்று ஆயர் அவர்களின் தலைமையில் அடிக்கல் நாட்டப்பட்டு 11.12.2022 அன்று திறப்பு விழா நடைபெற்றது வின்செந்தியர்களின் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.



### *கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்*

புனித அந்தோணியார் ஆலயம் வயலின்கரை புனித வின்சென்ட் தே பவுல் கிளைச்சபையின் கிறிஸ்துமஸ் கொண்டாட்டமானது 24.12.2022 (சனிக்கிழமை)

3 மணியளவில் ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை ரோபின்ஸ் குழிகோடில் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது. இந்த நிகழ்வில் மத்திய சபை திட்ட அலுவலர் சகோதரர் குமரித்தோழன் மற்றும் மத்திய சபை பொருளாளர் சகோதரர் ஜாண் நிகேஷ் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். இந்நிகழ்வில் 15 தத்து குடும்பங்களுக்கு தலா Rs.1000, 5kg அரிசி மற்றும் கிறிஸ்துமஸ்



கேக்கும் வழங்கப்பட்டது. அதுபோல கேன்சர் நோயினால் பாதிக்கப்பட்ட ஒரு சகோதரிக்கு Rs. 2000 மும் வழங்கப்பட்டது. நிகழ்சிகளை கிளை சபை தலைவர் ஒருங்கிணைத்து வழிநடத்தினார்கள்

D. P. ஷாஜி

தகவல் தொடர்பு அலுவலர்

---

## ஆயர் இல்ல அயலார்களின் ஆண்டுவிழா

ஆயர் இல்ல அயலார்களின் ஐந்தாம் ஆண்டு கூட்டமும் கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டமும் 23.12.2022 மாலை 6.30 மணிக்கு நடைபெற்றது. இது ரோஷன் குழுவினரின் இறைவணக்க பாடலோடு தொடங்கியது. இயக்குனர் அருட்தந்தை அஜின் ஜோஸ் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். திரு எட்வின்சன் அவர்கள் ஆண்டு அறிக்கை வாசித்தார். மறை மாவட்ட ஆவணகாப்பாளர் பேரருட்தந்தை ஜோஷி குளதுங்கல் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். நிகழ்விற்கு இடையே CMC மற்றும் CTC அருட்சகோதரிகளின் பாடல்களும் இடம்பெற்றன. திருமதி வினோலி குமார் உருவாக்கிய கடந்தாண்டு பதிவுகள் திரையிடப்பட்டன. திரு. குமார் அவர்களும் வாழ்த்துரை வழங்கினார். அனைவருடனும் இணைந்து ஆயர் அவர்கள் கிறிஸ்மஸ் கேக் வெட்டி கிறிஸ்துமஸ் செய்தி வழங்கினார்கள். அனைவருக்கும் நினைவு பரிசு வழங்கப்பட்டது. நிறைவாக அருட்சகோதரி பாவனா அவர்கள் நன்றி கூறினார். நாட்டுப்பண்ணுடனும் அன்பின் விருந்தோடும் விழா இனிதே நிறைவு பெற்றது.

# மிஷன் லீக் இயக்கம்

சிறுமலர் MISSION LEAGUE

***மிஷன் லீக் எழுச்சி பயணம்***

சிறுமலர் மிஷன் லீக் இயக்கத்தின் பவள விழாவை முன்னிட்டு மிஷன் லீக் எழுச்சி பயணம் மறைமாவட்டம் முழுவதும் வலம் வருகிறது. அதன் ஒருபகுதியாக டிசம்பர் 18 ஞாயிற்றுக்கிழமை தக்கலையிலிருந்து தென்காசி மறைதொண்டு தளத்திற்கு எடுத்துசெல்லப்பட்டது. முதலில் திருநெல்வேலி மிஷனுக்கு எடுத்து செல்லப்பட்டு அருட்தந்தை அகஸ்டின் ஆலப்புரக்கல் தலைமையில் பங்குமக்கள் முன்னிலையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்பு அங்கிருந்து வாஞ்சிநகர் மிஷன் தளத்திற்கு கொண்டுசெல்லப்பட்டது. மறைதொண்டுதள மிஷன் லீக் இயக்குநர் அருட்தந்தை ஜின்ஸ் MCBS அவர்கள் தலைமையில் வாஞ்சிநகர் பங்கு தந்தை லிஜோ அவர்கள் முன்னிலையில் பங்குமக்கள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். பின்னர் மறைமாவட்ட மிஷன்லீக் இயக்குநர் அருட்தந்தை பிரின்டோ திருப்பலி நிறைவேற்றினார். இந்நிகழ்வுகளில் மறைமாவட்ட மிஷன்லீக் இயக்குநர் அருட்தந்தை பிரின்டோ, துணை இயக்குநர் அருட்சகோதரி ஆன்கிரேஸ் FCC மற்றும் பொறுப்பாளர்கள் திரு. ஞானதாஸ், திரு. அஜூ தோமஸ், திருமதி லதா மற்றும் திருமதி ஸ்னேக லதா ஆகியோர் உடனிருந்தனர்.



**CML Platinum Jubilee Celebration**

*Place: Kalluvilai*

*Date: 29 January 2023, Sunday*

*Time: 02.30 pm – 06.30 pm*

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

***பொன்விழா***

தக்கலை மறைமாவட்டத்தின் கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் குமரி மாவட்டத்தில் அடித்தட்டு மக்களின் வளர்ச்சிக்கு 1972 முதல் 50 ஆண்டுகளாக சிறப்பாக செயல்பட்டு வருகிறது. பெண்கள் மேம்பாட்டிற்காக சுய உதவி குழுக்கள், தொழில் முனைவோர்களை உருவாக்க தொழில் பயிற்சிகள், ஏழைகள் ஏற்றம் பெற தத்துக்குடும்ப திட்டம், படுக்கை நோயாளிகளுக்கு நோய் தணிப்பு அலகு, மாணவர் தரம் உயர்த்த Educare திட்டம், புற்று நோயாளிகளுக்கென்று எழுவோம் இயக்கம், பேரிடர் நிவாரணம் போன்ற திட்டங்களோடு செயல்பட்டு வரும் சங்கமானது 2022 டிசம்பர் 5ஆம் தேதி பொன் விழா ஆண்டினை நிறைவு செய்தது.இதன் பொன்விழா நிறைவு கொண்டாட்டமானது தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களின் பொன்விழா வாழ்த்துக்களை கூறி 50 ஆண்டு காலம் கடவுள் கரம் பிடித்து நடத்தியதை நினைவு கூர்ந்து தலைமையுரையாற்றினார். பின்பு 10 ஏழைப்பெண்களுக்கு திருமண நிதியுதவி திட்டத்தை துவங்கி வைத்தார்கள். தொடர்ந்து திரு நாஞ்சில் சம்பத், குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் திரு.பிறின்ஸ் MLA, TASSOS இயக்குநர் அருட்தந்தை ஆல்பர்ட் தம்பிதுரை குமரி மாவட்ட சமூக பணித்துறை அலுவலர் திருமதி சரோஜினி Caritas india அலுவலர் திரு ஜான் ஆரோக்கிய ராஜ் மற்றும் குழித்துறை மறைமாவட்ட தொடர்பாளர் பேரருட்தந்தை ஜோசு ரெத்தினம், எழுத்தாளர் செல்வி மலர்வதி ஆகியோர் வாழ்த்துரை வழங்கி புதிய திட்டங்களை துவக்கி வைத்தார்கள். KKSSS தலைவர் மற்றும் தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வர்.பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்துபறம்பில் அவர்கள் KKSSS -ல் 25 வருடத்திற்கு மேல் பணிபுரிந்த பணியாளர்களை பாராட்டி நினைவு பரிசு வழங்கினார்கள். தொடர்ந்து பொன்விழாவையொட்டி நடைபெற்ற போட்டிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. நிகழ்வின் இடையிடையே கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்நிகழ்வில் பல்வேறு மறைமாவட்ட அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள் மற்றும் சுயஉதவி பெறுப்பாளர்கள் என 1500 மேற்பட்டோர்கள் கலந்து கொண்டனர்.

***CTWWC Training***

Changing the way we care -2 ஜனவரி மாதத்தின் திட்டத்தின் திட்டமிடல்

மற்றும் VMT Tool பயிற்சி வகுப்பானது 08-12-2022 மற்றும் 09-12-2022 தினங்களில் KKSSS ஒருங்கிணைப்பில் KKSSS அரங்கத்தில் வைத்து நடைபெற்றது. இப்பயிற்சியில் கன்னியாகுமரி மாவட்டத்தை சார்ந்த நான்கு மறைமாவட்டடதின் சமூக சேவை நிறுவனம் மற்றும் திருச்சி சமூக சேவை மையத்திலிருந்தும் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை TASSOS திட்ட அலுவலர் திருமதி. காயத்திரி அவர்கள் வழிநடத்தினார்கள். இப்பயிற்சியில் CTWWC திட்டத்தின் குறிக்கோள் மற்றும் VMT TOOL விவாதிக்கப்பட்டது. இரண்டாம் நாள் பயிற்சி முடிவில் VMT TOOL செய்முறை பயிற்சி அளிக்கப்பட்டது. இறுதியில் TASSOS இணை இயக்குநர் அருட்தந்தை.ஆரோக்கிய சாமி அவர்கள் நன்றி கூறினார்கள். நான்கு மறை மாவட்டங்களிலிருந்து 26 நபர்கள் கலந்து கொண்டனர். அதில் KKSSS சார்பில் இயக்குநர் தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் உட்பட CTWWC திட்ட பணியாளர்கள் 9 நபர்கள் கலந்து கொண்டனர். நான்கு மறை மாவட்டங்களிலிருந்து 26 நபர்கள் கலந்து கொண்டனர்.

### *நினைவு திருப்பலி*



கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் முன்னாள் இயக்குநர் பேரருட்தந்தை தோமஸ் தெக்கேல் அவர்களின் 10 ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் சார்பில் கல்லுவிளை, புனித அன்னை தெரசா ஆலயத்தில் வைத்து அருட்தந்தை.தோமஸ் பூவத்துமூட்டில் மற்றும் அருட்தந்தை .மகேஷ் இருவரும் இணைந்து நினைவு திருப்பலி நடைபெற்றது. அப்போது தந்தையார் பேசும்போது "ஏழை மக்களுக்காகவே தனது இறுத மூச்சு உள்ளவரை தக்கலை மறைமாவட்டத்திற்கு மட்டுமல்லாது ஒட்டுமொத்த குமரிமாவட்ட நலனுக்ககாவே வாழ்ந்து மறைந்தவர் தந்தையாவர்கள்" என கூறினார்கள். இந்நிகழ்ச்சியில் KKSSS அலுவலகப்பணியாளர்கள், தக்கலை நிதி லிமிடெட் பணியாளர்கள், களப்பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### *Educare கிறிஸ்துமஸ்-2022*

தக்கலை மறைமாவட்டத்திலுள்ள ஏழை மாணவர்கள் ஆங்கில புலமையுடன் கூடிய திறமையானவர்களாக பயிற்சி அளித்து வருவது Educare அலகு. இந்த மாணவர்களின் கிறிஸ்துமஸ் விழா KKSSS அரங்கத்தில் வைத்து டிசம்பர் 18 தேதி நடைபெற்றது. கிறிஸ்துமஸ் விழாவானது தக்கலை மறைமாவட்ட ஆயர்

மார் ஜார்ஜ் ராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் “இயேசு கிறிஸ்து உலக மக்களிடத்தில் அன்பினை காட்டினார் தன்னிடம் இருப்பவற்றை மற்றவருக்கு பகிர்ந்தளித்தார். இளம் தலைமுறை மாணவர்களான நீங்கள் அனைவரும் மற்றவரிடத்தில்



அன்பு காட்டுவதையும் பகிர்ந்தளிக்து வாழ்வதையும் வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். ஆண்டுக்கொரு முறை உலகெங்கும் உற்சாகமாகவும் ஆனந்தமாகவும் கொண்டாடப்படுகின்ற கிறிஸ்துமஸ் விழா நாட்கள் நெருங்கி வருகின்ற நேரத்தில் நம்மில் எழுகின்ற எண்ணங்கள் எல்லாம் “புத்தாடை, குடில், அலங்கார விளக்குகள்,கேக் மற்றும் பரிசுப்பொருட்கள் போன்றவை இருப்பது இயல்பே அதை எளியோர்களுக்கு பகிர்ந்தளிப்பதே கிறிஸ்துமஸ்” என்று கூறினார். KKSSS இயக்குநர் தந்தை.தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றும் போது “நாம் தடுமாறுகின்ற போது இறைவன் மனித வடிவில் உதவி செய்வார்.மனிதனோடு வாழ்வதற்காக மனிதனாகப் பிறந்தார் இயேசு.இயேசு பிறந்த தினத்தைச் சிறப்பாக பல ஆண்டுகளாகத் தணித்துவமான முறையில் கொண்டாடி வருகின்ற Educare மாணவர்களுக்கு பாராட்டுகள்” என்று கூறினார் .நிகழ்வில்,குழந்தை இயேசுவின் பிறப்பினைச் சித்தரிக்கும் வகையில் குடில் மற்றும் இயேசு பிறப்பை பற்றிய நடகம் நடைபெற்றது. நிகழ்வுக்கு இடையிடையே கலைநிகழ்சிகள் நடைபெற்றன, Educare மாணவர்களுக்கு கிறிஸ்துமஸ் பரிசினை KKSSS இயக்குநர் தந்தை வழங்கினார்கள். இந்த நிகழ்வுகளை Educare ஒருங்கிணைப்பாளர் அருட்சகோதரி.மெரின் றோஸ் அவர்கள் ஒருங்கிணைத்தார்கள். இதில் சுமார் 200 மேற்பட்ட மாணவர்கள்;, பெற்றோர் அலுவலக பணியாளர்கள் என ஏராளமனோர் கலந்து கொண்டனர்.

***கிறிஸ்துமஸ்***

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் பணியாளர்களின் கிறிஸ்மஸ்

கொண்டாட்டம் டிசம்பர் 23 தேதி KKSSS வளாகத்தில் நடைபெற்றது. கிறிஸ்துமஸ் விழாவானது KKSSS தலைவர் மற்றும் தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வர்.பேருட்தந்தை தோமஸ் பவ்வத்துபறம்பில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது அப்போது “கிறிஸ்துமஸ் விழாவானது நம் ஒவ்வொருவருக்கும் கடவுள் மகிழ்ந்தளித்த மற்றொரு பரிசு இதனை ஏற்றுக்கொண்டு நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும்



வாழ்த்து; செல்ல வேண்டிய நேரமிது. கொண்டாட்டங்கள் உயிர் பெற வேண்டுமானால் நாம் மகிழ்ச்சியுடன் கொண்டாடவேண்டும்” என கூறினார். சிறப்பு விருந்தினராக முனைவர் சுரேஷ் காணி அவர்கள் கலந்து கொண்டு கிறிஸ்துமஸ் உரையாற்றினார். அப்போது “இந்தியாவில் கிறிஸ்துமஸ் விழா சிறப்பாக குமரிமாவட்டத்தில் கொண்டாடப்படுகிறது. சமூகத்தின் நன்மைக்காக நாம் சேவை செய்வதன் மூலம் அனைவரையும் மீட்பதே கிறிஸ்மஸ் நோக்கம்.ஒருவருக்கொருவர் இரக்கத்துடனும் அன்புடனும் வாழ்வதன் மூலமும்,மனிதகுலம் தங்கள் வாழ்க்கையில் கடவுளின் அன்பை உண்மையாக அனுபவிக்க வைப்பதில் இயேசு மிகுந்த மதிப்பை கொடுக்கிறார். நீங்கள் மற்றொருவருக்கு உதவும்போதும் இயேசு உங்கள் இதய கூட்டில் பிறக்கும் போதும் இந்த கிறிஸ்துமஸ் சந்தோசமான கிறிஸ்துமஸாக மாறும்” என்று கூறினார். KKSSS இயக்குநர்தந்தை.தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் கிறிஸ்துமஸ் வாழ்த்து செய்தி மற்றும் பணிமாறுதல் பெறும் அருட்சகோதரி எமலி அவர்களுக்கு வாழ்த்து செய்தியும் வழங்கினார். இடையிடையே அலுவலக பணியாளர்களின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது.இதில் KKSSS குடும்பத்தின் பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

**அருட்தந்தை எபின் பூவத்துமூட்டில்**

**செயலர்**

# அருட்சகோதரர்களிடமிருந்து

***ஆதலால் ஆண்டவர்தாமே உங்களுக்கு ஓர் அடையாளத்தை அருள்வார். இதோ, கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார்; அக்குழந்தைக்கு அவள் 'இம்மானுவேல்' என்று பெயரிடுவார் - [ ஏசாயா. 7:14 ].***

அனைத்து குருமடங்களிலும் கிறிஸ்து பிறப்பு விழாவை சிறப்பாக கொண்டாடப்பட்டது. இது சகோதரர்களுக்கு மகிழ்ச்சியான மற்றும் ஆக்கபூர்வமான அனுபவமாக இருந்தது. கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் முடிந்து சகோதரர்கள் கிறிஸ்துமஸ் விடுமுறைக்கு சென்றனர். நமது மறைமாவட்டத்தில் கிறிஸ்து பிறப்பு விழாவுக்கு பங்குகளில் உதவி புரிவதற்காக சகோதரகள் வந்தார்கள். அவர்களுக்கான கிறிஸ்த்துமஸ் கொண்டாட்டம் ஆயர், குருக்குலமுதல்வர் மற்றும் ஆவணக்கப்பாளர் ஆகியோருடன் நடைபெற்றது. சகோதரர்கள் அங்கு தங்களுடைய குருமட அனுபவங்கள் பகிர்ந்து கொண்டனர் மற்றும் அவர்கள் ஒரு அழகான கிறிஸ்து பிறப்பு பாடல் பாடினர். பின்னர் ஆயர், குருகுலமுதல்வர் மற்றும் ஆவணக்கப்பளார் ஆகியோர் தங்கள் செய்தியை வழங்கினர். திருத்தொண்டர் பிரின்ஸ் சகோதரர்கள் சார்பாக ஒரு கிறிஸ்துமஸ் செய்தி வழங்கினார். ஆயர் அவர்கள் சகோதரர்களுக்கு கிறிஸ்மஸ் பரிசுகளை வழங்கிய பின் கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துகள் மற்றும் வளமான புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்தார். பின்னர் சகோதரக்கள் ஆயருடன் இணைந்து சுவையான மதிய உணவு சாப்பிட்டர்கள்.



| | |
|---|---|
| Dn லிஜு | நித்திரவிளை |
| Dn. பிரின்ஸ் | நாகர்கோவில் |
| Dn அஜின் | விருதுநகர் |
| Dn ஜார்ஜ்குட்டி | சூசைபுரம் |
| சகோ அமண்டோ & சகோ அனூப் | குட்டைக்கோடு |
| சகோ ஆல்பின் | வாறுதட்டு |
| சகோ சாஞ்சோ | மாலைக்கோடு |
| சகோ லின்டோ | மஞ்சாலுமூடு |
| சகோ சுனில் | அண்ணிக்கரை |
| சகோ பிபின் K.J | ஆனையடி |
| சகோ பிபின் R மேத்யூ | புளியறை |
| சகோ டோனி | காரோடு |
| சகோ டிவின் | கயத்தாறு |
| சகோ அபிஷ்வின் | முக்கூட்டுக்கல் |
| சகோ மெல்வின் | கிறிஸ்துராஜபுரம் |
| சகோ ஜான் | காட்டாத்துறை |
| சகோ ஜோஸ்பின் ஜோசப் | பெங்கிரி |
| சகோ மோனிஷ் | தக்காளிவிளை |
| சகோ ஆகாஷ் | பெருஞ்சிலம்பு |
| சகோ ஜோஸ்பின் மாத்யூ | குடுக்கச்சிவிளை |

கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு சகோதரர்கள் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பங்குகளில் இறைபணிக்காக சென்றார்கள்.

சகோதரர்கள் அதிக உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் தங்கள் இறைபணியை மிகச் சிறப்பாக செய்தார்கள்.

விடுமுறை காலகட்டத்தில் சகோதரர்கள் மறைக்கல்வி போட்டிக்கு நடுவர்களாக நியமிக்கப்பட்டனர். அவர்கள் நடுவராக பணியில் மிகுந்த ஆர்வத்துடனும் செயல்பட்டார்கள். அவர்கள் சிறப்பாக செயல்படும் குழந்தைகளை ஊக்குவித்தனர் மற்றும் அவர்களின் திறமைகளை மதிப்பீடு செய்தனர்.

கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்திற்கு பிறகு சகோதரர்கள் விடுமுறைக்காக தங்கள் வீட்டிற்குச் சென்றனர். அனைத்து சகோதரர்களும் ஜனவரி முதல் வாரத்தில் அந்தந்த குருமடங்களுக்குத் திரும்புவார்கள். உங்கள் மதிப்புமிக்க ஜெபங்களை கேட்டுக்கொள்கிறோம். கடந்த 2022 ஆம் ஆண்டில் நீங்கள் செய்த ஜெபங்களுக்காகவும் உதவிகளுக்காகவும் நாங்கள் அனைவரும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். குறிப்பாக இந்த 2023 புத்தாண்டில் எங்கள் ஜெபங்களில் உங்களையும் நினைவில் கொள்கிறோம்.

**சகோ ஆண்டனி தகிடியேல்**

## மறைமாவட்ட நலம் விரும்புவோர் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்

*20.12.2023* இல் மறைமாவட்ட நலம் விரும்புவோர் கிறிஸ்துமஸ் கூடுகை தக்கலை சங்கமத்தில் மாலை *6* மணிக்கு மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் நடைபெற்றது. குழுவின் இயக்குனர் பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். குருகுல முதல்வர் பேரருள்தந்தை தோமஸ் பவத்துபரம்பில் அவர்கள் வாழ்த்துரை கூறினார். தலைமை உரையாற்றிய மேதகு ஆயர் அவர்கள் மறை மாவட்டத்திற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவி செய்கின்ற உங்கள் ஒவ்வொருவரையும் பாராட்டுகின்றேன். உங்களது தனிப்பட்ட ஆலோசனைகளையும் மறைமாவட்டம் வரவேற்கிறது எனக் கூறி அனைவருக்கும் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் தெரிவித்தார். திரு எட்வின்சன் அனைவரையும் அறிமுகம் செய்து வைத்தார். தொடர்ந்து அனைவருக்கும் நினைவு பரிசுகள் வழங்கப்பட்டது. அனைவருடனும் இணைந்து ஆயர் கிறிஸ்துமஸ் கேக் வெட்டினார்கள். மறை மாவட்டத்தை சாராத மறை மாவட்டத்திற்கு உதவி செய்கின்ற பல்வேறு மக்கள் பிரதிநிதிகள் இதில் பங்கேற்றனர். அனைவரும் தனித்தனியாக தங்கள் கருத்துக்களையும் பரிமாறிக் கொண்டனர். நிறைவாக திரு.சோனிக் ரீகன் அவர்கள் நன்றி கூறினார். விழாவில் சூசைபுரத்தை சார்ந்த பாடல் குழுவினர் கிறிஸ்மஸ் கீதம் இசைத்தனர்.



# மறைமாவட்டச் செய்திகள்

## மறைமாவட்ட நற்செய்தி பெருவிழா

மறைமாவட்ட நற்செய்தி பெருவிழா 2022 டிசம்பர் 02, 03, 04 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய நாட்களில் கல்லுவிளை சீனாய் தியான இல்லத்தில் நடைபெற்றது. கோட்டயத்தை சார்ந்த அருட்தந்தை அகஸ்டின் மேனங்கரியில் VC மற்றும் அருட்தந்தை டேனியல் VC ஆகியோர் வழிநடத்தினர். மறைக்கல்வி மாணவர்களுக்கான தியானம் அருட்தந்தை பிரிண்டோ மற்றும் அருட்தந்தை அபிலாஷ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. குழந்தைகளுக்கான தியானத்தை அருட்தந்தை ரோபின் ஜோஸ் மற்றும் CMC அருட்தகோதரிகள் வழிநடத்தினர். அருட்தந்தை மிஜோ அவர்கள் இதற்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தார்.

## அருட்தந்தை தோமஸ் தெக்கேல் – நினைவு திருப்பலி

அருட்தந்தை தோமஸ் தெக்கேல் அவர்களின் 09 ஆம் ஆண்டு நினைவுத்திருப்பலி மாங்குளத்தில் உள்ள அவரது கல்லறையில் 2022 டிசம்பர் 14 அன்று நடைபெற்றது. மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. அருட்தந்தை ஜினோய் தொட்டியில் மற்றும் அருட்தந்தை ஜோஸ்மோன் புரையிடத்திகுந்நேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சீனாய் இறையியல் கல்வியகம்

டிசம்பர் 18, 2022 அன்று சீனாய் இறையியல் கல்வியகத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் சிறப்பு கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக, மறைமாவட்ட ஆவணக் காப்பாளர் பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் அவர்கள் பங்கேற்றார்கள். கல்வியகத்தின் இயக்குநர், பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்கள் விழாவில் உடனிருந்தார்.

## குருக்களுக்கான கூட்டம் மற்றும் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்

தக்கலை மறைமாவட்ட அருட்தந்தையர்களின் கூட்டம் மற்றும் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் 2022 டிசம்பர் 21 புதன்கிழமை தக்கலை சங்கமத்தில் மாலை 5.00 மணிக்கு நடைபெற்றது. மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB தலைமை தாங்கினார். இளங்குருமட அதிபர் அருட்தந்தை ஜோகி மரங்காட்டு CMI கிறிஸ்துமஸ் சிறப்பு செய்தி வழங்கினார். குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்துபறம்பில் இதற்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தார்.

# தென்காசி மறைத்தள செய்திகள்

## ▶ மிஷன்-லீக் கூட்டம்

மிஷன்-லீக் கூட்டமானது டிசம்பர் மாதம் 11 ஆம் தேதி மாலை 4 மணியளவில் பார்டரில் வைத்து நடத்தப்பட்டது. மறைத்தள மிஷன்-லீக் இயக்குநர் அருட்தந்தை ஜின்ஸ் MCBS அவர்கள் வகுப்புகளை நடத்தினார். மிஷன்-லீக் எழுச்சி பயணத்தை குறித்தும் அத்துடன் செய்ய வேண்டிய செயல்களை குறித்தும் எடுத்துக்கூறினார். மிஷன்-லீக் எழுச்சி பயணத்தை முன்னிட்டு அதன் திருப்பேடகமானது  டிசம்பர் மாதம் 18 ஆம் தேதி தக்கலையிலிருந்து மறைமாவட்ட மிஷன-லீக் இயக்குநர் அருட்தந்தை பிரிடண்டோ மற்றும் குழுவினரால் சேர்ந்து வாஞ்சி ஆலயத்திற்கு கொண்டு வரப்பட்டது.

## ▶ கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்

தென்காசி மறைத்தளத்தில் பணியாற்றும் அருட்தந்தையர்கள் அருட்சகோதரிகளின் கிறிஸ்துமஸ் விழாவானது டிசம்பர் மாதம் 17 ஆம் தேதி பார்டரில் வைத்து சிறப்பிக்கப்பட்டது. அத்துடன் பார்ட்ரில் புதிதாக கட்டப்பட்ட குருசடி ஆயர் அவர்களால் அர்ச்சிக்கபட்டது.அன்றைய தினம் அனைத்து மத கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் பஞ்சாயத்து தலைவர் திருமதி ஆவுடையம்மாள், துணைத் தலைவர் திரு சந்தன மாரியப்பன் உறுப்பினர் திரு சீனிவாசன் ஆகியோரல் சிறப்பிக்கப்பட்டது. கிறிஸ்துமஸ் விழாவின் போது இளையோரின் கலைநிகழ்ச்சிகள் இடம் பெற்றன.



# மறைவட்டச் செய்திகள்

## படந்தாலுமூடு

### திரு இருதய மறைவட்ட ஆலயம் – படந்தாலுமூடு

7.12.2022 அன்று காலை 7 மணி முதல் மாலை 6 மணிவரை தொடர்ச்சியாக நற்கருணை ஆராதனை நடைபெற்றது. மாலை 6 மணிக்குத் திருப்பலியும் அதை தொடர்ந்து நற்கருணை ஆசீர்வாதமும் நடைபெற்றது.

12.12.2022 முதல் 19.12.2022 வரை பஜனை நடைபெற்றது.

18.12.20232 அன்று காலை 9 மணி முதல் மதியம் 1 மணிவரை அரை நாள் தியானம் நடைபெற்றது. இத்தியானத்தை அருட்தந்தை ஜாண் பால் அவர்கள் வழிநடத்தினார்கள். அதன் பிறகு அனை வருக்கும் ஒப்புரவு அருட்சாதனம் வழங்கப்பட்டது.

17.12.2022 அன்று மாதிர்ஜோதிஸ் இயக்கம் சார்பாக நடைபெற்ற கிறிஸ்து பிறப்பு பாடல் போட்டியில் முதல் பரிசைப் பெற்றார்.

20.12.2022 முதல் 22.12.2022 வரை அனைத்து உறவியங்களிலும் கீறிஸ்து பிறப்பு விழா கொண்டாடபட்டது. இவ்விழாவில் பாலாமறைமாவட்டத்தின் ஆராதனைச் சபையைச் சாந்த 8 அருட்கன்னியர்கள் கலந்து கொண்டார்கள். கிறிஸ்து பிறப்பு விழா அனைத்து உறவியங்களிலும் கலைநிகழ்சிகளுடன் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

24.12.2022 அன்று கிறிஸ்து பிறப்பு திருப்பலியானது இரவு 10 மணிக்கு நடைபெற்றது.

27.12.2012 அன்று மறைவட்ட அளவில் நடைபெற்ற மறைக்கல்வி மாணவர்களுக்கானப் போட்டியில் மாணவர்கள் கலந்து கொண்டு முதல் இடத்தைப் பெற்றார்கள்

### புனித மார்டின் டி போரஸ் ஆலயம் – கழுவன்திட்டை

இளையோர் இயக்கம் சார்பாக நடைபெற்ற கருத்தும் கானமும் பாடல் போட்டியில் இளைஞர்கள் முதல் பரிசைப் பெற்றார்கள்

11-12-2022 அன்று பங்குப்பேரவைக் கூட்டம் நடைபெற்றது.

24.12.2022 அன்று கிறிஸ்து பிறப்பு, திருப்பலியானது இரவு 11 மணிக்கு நடைபெற்றது. திருப்பலிக்குப் பின்பங்குதந்தை அவர்கள் கேக் வெட்டி அனைவருக்கும் வழங்கினார்கள். அதன் பின் மாதிர்ஜோதிஸ், இளையோர்

இயக்கம் மற்றும் குழந்தை ஈசோ இயக்கம் சார்பாக கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

### புனித மரிய கொரற்றி ஆலயம், அதங்கோடு

அமலோற்பவ திருவிழாவை முன்னிட்டு டிசம்பர் 8 ஆம் தேதி மாலை 6 மணிக்கு திருப்பலியும் அதைத் தொடர்ந்து செபமாலையும் நடைபெற்றது

14.2.2022 முதல் 23.12.2022 அன்று வரை பஜனை நடைபெற்றது.

26.12.2022 திருக்குடும்ப திருவிழாவை முன்னிட்டு மாலை 6 மணிக்குத் திருப்பலி நடைபெற்றது. இத்திருப்பலியானது திருக்குடும்ப சபையைச் சார்ந்த அருட்சகோதரிகளுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டது

28.12.2022 அன்று மாசற்ற குழந்தைகள் தினத்தையொட்டி மாலை 6 மணிக்கு திருப்பலி நடைபெற்றது. திருப்பலிக்கு பின் அனைத்து குழந்தைகளுக்காகவும் சிறப்பாக செபிக்கப்பட்டது. 24.12.2022 இரவு 11 மணிக்கு கிறிஸ்து பிறப்பு விழா திருப்பலி நடைபெற்றது.

### புனித மத்தேயு ஆலயம் – அண்ணிக்கரை

1.12.2022 முதல் 24.12.2022 வரை மாலை 5:30 மணிக்கு திருப்பலி நடைபெற்றது. எல்லா நாட்களிலும் கலந்து கொண்டவர்களுக்கு கிறிஸ்மஸ் தினத்தன்று பரிசுகள் வழங்கப்பட்டது.

டிசம்பர் 8 தூய கன்னி மரியாவின் அமலோற்பவ திருநாள் மாலை 5.30 மணிக்கு திருப்பலியுடன் கொண்டாடப்பட்டது.

டிசம்பர் 12 திங்கட்கிழமை கிறிஸ்மஸ் ஆயத்த தியானமும் பாவசங்கீர்த்தனமும் நடைபெற்றது.

டிசம்பர் 12 - 21 வரை இளையோர்கள் தலைமையில் எல்லா வீடுகளிலும் பஜனை பாடப்பட்டது.

டிசம்பர் 24 இரவு 10.30 மணிக்கு கிறிஸ்து பிறப்பு விழாவினுடைய திருச்சடங்குகள் ஆரம்பமானது. திருப்பலிக்கு பின் கிறிஸ்மஸ் மரவிழா குலுக்கல் சிறப்பான முறையில் நடைபெற்றது. தொடர்ந்து அனைவருக்கும் கிறிஸ்மஸ் கேக் வழங்கப்பட்டது இரவு திருப்பலிக்கு வர முடியாதவர்களுக்கு திருப்பலி டிசம்பர் 25 ஞாயிற்றுக்கிழமை மாலை 5:30 மணிக்கு நடைபெற்றது. டிசம்பர் 31 இரவு 11 மணிக்கு சிறப்பு நற்கருணை ஆராதனையும் தொடர்ந்து ஆடம்பர திருப்பலியும் நடைபெற்றது.

## மஞ்சாலுமூடு

### புனித குழந்தை தெரசா ஆலயம் மஞ்சாலுமூடு

மஞ்சாலுமூடு, புனித குழந்தை தெரசாள் ஆலயம் டைமண்ட் ஜூபிலி நிறைவு விழாவும், கிறிஸ்து பிறப்பு விழாவும் டிசம்பர் 25 அன்று கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் நமது ஆயர் அவர்கள் வருகை தந்து ஆடம்பர திருப்பலி நிறைவேற்றியதோடு அன்றைய நிகழ்வுகள் அனைத்திலும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

பெஜான்சிங் கண் மருத்துவமனை நாகர்கோயில் மற்றும் பெனு கண் கிளினிக் அரசுமூடு குலசேகரம் இணைந்து நடத்தும் மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாம் 27.11.2022 அன்று காலை 9 மணி முதல் மதியம் 1 மணிவரை மஞ்சாலுமூடு புனித குழந்தை தெரசா ஆலய வளாகத்தில் வைத்து நடைபெற்றது. இம் முகாமில் பங்கு மக்கள் மற்றும் சுற்று வட்டாரத்தில் உள்ள அனைத்து மக்களும் வருகை தந்து பயனடைந்தார்கள்.

### புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம் தெற்றிவிளை

தெற்றிவிளை புனித மிக்கேல் ஆலயத்தில் கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டத்திற்கு ஆயத்தமாக 23.12.2022 அன்று மாலை 5 மணி அளவில் ஜெபமாலை, திருப்பலி, தொடர்ந்து தியானமும், இடையில் பாவ சங்கீர்த்தனமும் நடைபெற்றது. அன்றைய திருப்பலி மற்றும் தியானத்தை அருட்தந்தை மகேஷ் அவர்கள் வழி நடத்தினார்

### புனித தோமையார் ஆலயம் முழுக்கோடு

மஞ்சலூமூடு மறைவட்ட அளவில் மறைக்கல்வி மாணவ மாணவிகளுக்கான விவிலிய போட்டிகளில் முழுக்கோடு புனித தோமையர் ஆலயம் முதல் இடம் பெற்றது



## தக்கலை–பிலாங்காலை

### புனித குழந்தை தெரசா மறைவட்ட ஆலயம் – பிலாங்காலை

புனித குழந்தை தெரசாள் ஆலயத்தில் இளைஞர் இயக்கம் சார்பாக புல்குடில் கட்டப்பட்டது. ஆலயத்தில் உள்ள அனைத்து உறவியங்களுக்கும் சென்று கிறிஸ்து பிறப்பு செய்தி கூறினார். கிறிஸ்து பிறப்பு நிகழ்வுகள் 24.12.2022 அன்று இரவு 11.30 மணிக்கு திருப்பலியுடன் ஆரம்பமானது தொடர்ந்து உறவியங்களுக்கான கிறிஸ்துமஸ் பாடல்கள் போட்டி நடைபெற்றது. இதில் அந்தோணியார் உறவியம் முதலிடத்தையும் புனித அன்னை மரியாள் உறவியம் இரண்டாம் இடத்தையும் புனித அல்போன்சா உறவியம் மூன்றாம் இடத்தையும் பெற்றது. இறுதியில் அருட்தந்தை தோமஸ் தெக்கத்தல கேக் வெட்டி அனைவருக்கும் வழங்கினார்.

### புனித சூசையப்பர் ஆலயம் – தடிக்காரன்கோணம்

கிறிஸ்து பிறப்பு விழா திருப்பலி நடைபெற்றது. புற்குடில் கட்டப்பட்டது. அனைத்து வீடுகளிலும் கிறிஸ்து பிறப்பு செய்தி கூறப்பட்டது

### ஆரோக்கிய அன்னை மிஷன் ஆலயம் – வட்டக்கோட்டை



வட்டகோட்டை ஆரோக்கிய அன்னை மிஷன் ஆலயத்தில் புதிதாக மிஷன் லீக் இயக்கம் 11.12.2022 அன்று தொடங்கப்பட்டது. குத்துவிளக்கேற்றி உறுப்பினர்கள் மிஷன் லீக் ஜெபம் செய்து தொடங்கிவைத்தனர்

### புனித தோமையார் ஆலயம் – அஞ்சுகிராமம்

மிஷன் லீக் இயக்கத்தின் 75 ஆவது பிளாட்டினம் ஜூபிலியை முன்னிட்டு அஞ்சுகிராமம் புனித தோமையார் ஆலயத்தில் எழுச்சி பயணம் நடைபெற்றது

### புனித மிக்கேல் அதிதூதர் மிஷன் ஆலயம் – வெள்ளாம்பி

பங்கு மக்களால் புல்குடில் கட்டப்பட்டது கிறிஸ்து பிறப்பு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. பஜனை வாயிலாக ஆலயத்தில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் சென்று கிறிஸ்து பிறப்பு செய்தி கூறினார்

இளைஞர்கள் மற்றும் பங்குமக்கள் சிறப்பாக ஒத்துழைத்தனர்.

### ▶ புனித ஜார்ஜ் மிஷன் ஆலயம் – ஆனையடி

ஆனையடி புனித ஜார்ஜ் மிஷன் ஆலயத்தில் கிறிஸ்து பிறப்பு விழா புத்தாண்டு சிறப்பாக கொண்டாடப்பட்டது. கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு கிறிஸ்துமஸ் மர விழா மற்றும் பொருட்கள் ஏலம் நடைபெற்றது

### ▶ புனித சவேரியார் ஆலயம் கைசாலவிளை

2022 டிசம்பர் 2, 3 மற்றும் 4 ஆகிய நாட்களில் ஆலய திருவிழா சிறப்பாக நடைபெற்றது அருட்தந்தை தோமஸ் தெக்கத்தல தலைமையில் 13 கொடி நேர்சை 101 தட்டு நேர்சை ஆகிய நிகழ்வுகள் முதல்முறையாக சிறப்பாக நடைபெற்றது. இறுதி நாளில் மறைக்கல்வி மற்றும் அனைத்து பக்த இயக்கங்களின் ஆண்டுவிழா நடைபெற்றது.

டிசம்பர் 6 முதல் 13 வரை 8 நாட்கள் கிறிஸ்துமஸ் பஜனை நடைபெற்றது.

ஆலய அர்ச்சிப்பின் முதல் ஆண்டு நிறைவு 2022 டிசம்பர் 30 ஆலயத்தில் நடைபெற்றது. இதில் 6 பேர் முதல் திருவிருந்தையும் 4 பேர் முதல் திருமுழுக்கும் பெற்றுக்கொண்டனர்



## களியல்

### ▶ புனித சூசையப்பர் ஆலயம் – காரோடு

காரோடு புனித சூசையப்பர் ஆலயத்தில் கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு நன்மையின் மரம் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கிடைக்கப்பெற்ற பொருட்களை பங்கில் ஏழையாக இருந்த குடும்பங்களுக்கு 2022 டிசம்பர் 24 அன்று பகிர்ந்து அளிக்கப்பட்டது. இளையோர் இயக்கம் சார்பாக சமூகத்தில் உள்ள ஒரு ஏழை குடும்பத்திற்கு ஒருநாளுக்கு தேவையான

மளிகை பொருட்கள் வழங்கப்பட்டது.

28.12.2022 அன்று காரோடு தேவசகாயம் நல்வாழ்வு நிலையத்தில் மாசற்ற குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது

## சூசைபுரம்

### கிறிஸ்து அரசர் ஆலயம், பாலப்பள்ளம்

பங்கில் ஒன்பது நாள்கள் பஜனை அனைத்து உறவியங்களிலும் நடைபெற்றது.கிறிஸ்து பிறப்பிற்கு ஆயத்தமாக 25 நோன்பு பங்களவில் சிறப்பாக கடைபிடிக்கபட்டது.

பங்கு இளைஞர்கள் சார்பில் அழகிய குடில் அமைக்கபட்டது.

அமலோற்பவ திருநாளான டிசம்பர் 8 அன்று கெபியில் சிறப்பு ஜெபமாலை நடைபெற்றது.

மூன்றாம் சனிக்கிழமை பங்கில் அரை நாள் தியானம் நடந்தது.

கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு அனைத்து வீடுகளுக்கும் டிசம்பர் 23 இல் கேக் வழங்கபட்டது. டிசம்பர் 24 இரவு 11 மணிக்கு பிறப்பு திருநாள் திருப்பலி நடந்தது. காலையில் உறவியங்கள் சார்பில் அமைக்கபட்ட கிறிஸ்மஸ் மரப் போட்டி நடந்தது. முதல் பரிசு ரூ.1000 புனித பிரான்சிஸ் சவேரியார் உறவியத்திற்கும், இரண்டாவது பரிசு ரூ.750 புனித ஜேம்ஸ் உறவியத்திற்கும் மூன்றாம் பரிசு ரூ.500 புனித தோமையார் மற்றும் புனித அந்தோணியார் உறவியங்களுக்கும் மற்றும் ஆறுதல் பரிசுகளும் வழங்கபட்டது. பங்குதந்தை அருட்தந்தை ஜாண்பால் கிறிஸ்துமஸ் கேக் வெட்டி அனைவருக்கும் வழங்கி வாழ்த்துக்கள் தெரிவித்தார். 28 ஆம் தேதி நடத்தப்பட்ட மறைவட்ட மறைக்கல்வி போட்டிகளில் கலந்துகொண்டு பங்கு மாணவ மாணவியர் மறைவட்ட அளவில் இரண்டாம் இடத்தை பிடித்து பங்கிற்கு பெருமை சேர்த்தனர்.

### தேவமாதா ஆலயம் – கிள்ளியூர்

***கிறிஸ்து பிறப்பு விழா நிகழ்ச்சிகளும் போட்டிகளும்***

18.12.2022 ஞாயிற்றுக்கிழமை திருப்பலிக்கு பின்னர் கிறிஸ்துமஸ் பாடல் போட்டி மற்றும் கிறிஸ்மஸ் தாத்தா போட்டி உறவிய அடிப்படையில் நடைபெற்றது. இளையோர்கள் இந்நிகழ்வை தலைமையேற்று நடத்தினர். அன்றைய தினம் அனைத்து மக்களுக்கும் காலை உணவு வழங்கப்பட்டது 20.12.2022 செவ்வாய்க்கிழமை மாலை 6:00 மணி முதல் இரவு 7.00 மணி வரை அருட்தந்தை மைக்கேல் ஆரோக்யசாமி



அவர்களால் கிறிஸ்து பிறப்பு விழாவின் சிறப்பு தியானம் நடைபெற்றது.

*21.12.2022* புதன்கிழமை அன்று புனித சவேரியார் உறவிய ஆண்டுவிழா பங்கு தந்தை அருட்தந்தை ஷாஜன் நெட்டபங்கு தலைமையில் நடைபெற்றது மாலை *6* மணிக்கு ஆடம்பரத் திருப்பலியும், ஜெபமாலை பவனியும், நவநாளும் நடைபெற்றது. இறுதியில் அனைவருக்கும் அன்பின் விருந்து வழங்கப்பட்டது.

*24.12.2022* அன்று இரவு *10* மணிக்கு கிறிஸ்துமஸ் திருப்பலி பங்குதந்தை தலைமையில் நடைபெற்றது. அருட்தந்தை அபிலாஷ் சேவியர் ராஜ் மறையுரை வழங்கினார் திருப்பலிக்கு பின்னர் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. தொடர்ந்து டிசம்பர் *1* முதல் *25* வரை தவறாமல் திருப்பலிக்கு வந்தவர்களுக்கும் ஜூன் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை தவறாமல் திருப்பலிக்கு வந்தவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன மாதர் ஜோதிஸ் தாய்மார்கள் தலைமையிலான குழுக்கள் முறையிலான கிறிஸ்துமஸ் மர விழா நடைபெற்றது.

*31.12.2012* இரவு *10.15* மணியிலிருந்து *11.15* மணி வரை அருட்சகோதரர் சனில் தலைமையில் வருட இறுதி ஆராதனை நடைபெற்றது தொடர்ந்து புது வருடத்திற்கான திருப்பலி நடைபெற்றது

### புனித தோமையார் ஆலயம் மாதாபுரம்

*18.12.2022* அன்று ஞாயிற்றுக்கிழமை *12* மணி ஆராதனை அருட்தந்தை ஷாஜன் நெட்டபொங்கு தலைமையில் நடைபெற்றது. ஏராளமான மக்கள் கலந்து கொண்டு இறையாசி பெற்று சென்றனர். அனைவருக்கும் மதிய உணவு மற்றும் இரவு உணவு வழங்கப்பட்டது.

*24.12.2022* அன்று இரவு *8* மணிக்கு கிறிஸ்துமஸ் ஆடம்பர திருப்பலி நடைபெற்றது

31.12.2022அன்று இரவு 10.30 மணிக்கு ஆராதனையும் தொடர்ந்து புது வருடத்திற்கான திருப்பலியும் நடைபெற்றது.

- **புனித வியாகப்பர் ஆலயம் – மாங்கரை**

01.12.2022 முதல் கிறிஸ்தவ பஜனை நடைபெற்றது. 8.12.2022 அன்று அமலோற்பவ மாதாவின் திருவிழாவை முன்னிட்டு மாலை 5.45 மணியளவில் அருட்தந்தை ஜோகேஷ் தலைமையில் ஜெபமாலையும் தொடர்ந்து ஆடம்பரத் திருப்பலியும் நடைபெற்றது. இறுதியில் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

23.12.2022 அன்று 5:30 மணிக்கு திருப்பலியும் நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது. தொடர்ந்து பாவசங்கீர்த்தனம் நடைபெற்றது. 23.12.2022 அன்று படுக்கை நோயாளிகளுக்கு இல்லங்களில் சென்று நற்கருணை வழங்கப்பட்டது.

24.12.2022 அன்று இரவு 10.30 மணியளவில் கிறிஸ்து பிறப்பு திருப்பலி நடைபெற்றது. பின்னர் கேக் வெட்டி அனைவருக்கும் வழங்கப்பட்டது. இளையோர்கள் சார்பாக கிறிஸ்துமஸ் மரவிழா நடைபெற்றது.

28.12.2022 மாசற்ற குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது. 31.12.2022 அன்று இரவு 10.30 மணி முதல் 12 மணி வரை அருட்தந்தை ஜோகேஷ் தலைமையில் வருட இறுதி ஆராதனையும் தொடர்ந்து புது வருடத்திற்கான திருப்பலியும் நடைபெற்றது.

## நித்திரவிளை

- **ஜெயமாத மறைவட்ட ஆலயம் – நித்திரவிளை**

டிசம்பர் 4 பொதுமன்றம் வைத்து புதிய ஆலய கட்டுமான பணிக்கான குழு மற்றும் பரிந்துரை ஜெபக்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

புதன், சனி நாட்களில் மாலை 6.30 மனிக்கு திருப்பலி நடைபெற்றது.

டிசம்பர் 8 தூய கன்னிமரியாவின் அமலோற்பவ திருநாள் மாலை 6.30 மணிக்கு சிறப்பு திருப்பலியுடன் கொண்டாடப்பட்டது.

டிசம்பர் 13, கிறிஸ்மஸ் தயாரிப்பு பாவசங்கீர்த்தனம் நடைபெற்றது.

டிசம்பர் 18, கிறிஸ்மஸ் ஏலம் நடைபெற்றது.

டிசம்பர் 14 - 19 வரை கைக்காரர்கள் தலைமையில் எல்லா வீடுகளிலும் பஜனை பாடப்பட்டது.

கைக்காரர்கள் தலைமையில் அழகான முறையில் புல்குடில் கட்டப்பட்டது.

டிசம்பர் 24 இரவு 8.30 மணிக்கு கிறிஸ்து பிறப்பு விழாவினுடைய திருச்சடங்குகள் ஆரம்பமானது. தொடர்ந்து அனைவருக்கும் கிறிஸ்மஸ் கேக் மற்றும் சுக்குகாப்பி வழங்கப்பட்டது.

திருப்பலிக்கு பின் இளையோர்கள் தலைமையில் கிறிஸ்மஸ் மர விழா குலுக்கல் சிறப்பான முறையில் நடைபெற்றது.

இரவு திருப்பலிக்கு வர முடியாதவர்களுக்கு டிசம்பர் 25 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு திருப்பலி நடைபெற்றது.

டிசம்பர் 31 இரவு 6 மணிக்கு சிறப்பு நற்கருணை ஆராதனையும் தொடர்ந்து ஆடம்பர திருப்பலியும் நடைபெற்றது.

### புனித ஜார்ஜியர் திருத்தலம் – முஞ்சிறை

2022 டிசம்பர் 01 அன்று காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை 12 மணி நேர தொடர் ஜெபமாலை நடைபெற்றது. முதலில் அருட்தந்தை மற்றும் கன்னியர்கள் தொடங்கி ஒவ்வொரு உறவியமாக ஜெபமாலை சொல்லி அன்னைக்கு காணிக்கையாக்கப்பட்டது. தொடர்ந்து மாலை 6 மணியளவில் ஆடம்பர திருப்பலி, இறைவார்த்தை பகிர்வு, கைவைத்தல் மன்றாட்டு ஆகியவை நடைபெற்றது. அருட்தந்தை றோபின் ஜோஸ் அவர்கள் இறைவார்தை எடுத்துரைக்கும் போது "ஆண்டவரிடம் நாம் கொள்ளும் அன்பு, விசுவாசம், உறவு ஆகியவை நம்மை வளர்ச்சிக்கு மேன்நமேலும் இட்டுச்செல்லும், என்றும் ஆண்டவராம் இறைவன் தன்னையே பலிப்பொருளாக்கி நம் ஒவ்வொருவரையும் தேடி வருகிறார். அந்த அழைப்பை ஏற்று நாம் வாழும் போது நிறைந்த பலனை பெற முடியும்" என்று கூறினார்கள். பின்பு இறுதி ஆசீருடன் நிறைவடைந்தது. அனைவருக்கும் அன்பின் விருந்து வழங்கப்பட்டது.

2022 டிசம்பர் 22 அன்று கிறிஸ்து பிறப்புக்கு ஆயத்தமாக அனைவருக்கும் தங்கள் பாவ வாழ்விலிருந்து ஒப்புரவு பெற அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு எல்லா மக்களுக்கும் பாவசங்கீர்த்தனம் பெற்று இறைவனை தங்கள் உள்ளமாம் குடிலில் பிறக்க செய்து ஆசீர் பெற்றனர்.

24 ம் தேதி மாலை வின்செந்திய உறுப்பினர்கள் அருட்தந்தையோடு இணைந்து ஏழை குடும்பங்களை சந்தித்து இறைமகனின் பிறப்பு செய்தியை பகிர்ந்து கொண்டனர்.

24 ம் தேதி இரவு 11.30 மணிக்கு கிறிஸ்து பிறப்பு விழா திருப்பலி மற்றும் வழிபாடுகள் ஆரம்பமானது. திருப்பலிக்கு இடையே திருப்பவனி நடைபெற்றது. திருப்பலிக்கு பின்பு கிறிஸ்துமஸ் கேக் வெட்டி அனைவருக்கும் வழங்கப்பட்டது. தொடர்ந்து இளையோர்கள்

தலைமையில் கிறிஸ்துமஸ் மரவிழா குலுக்கல் நடைபெற்றது.

28 ம் தேதி மாசில்லா குழந்தைகள் தின விழா கொண்டாடப்பட்டது. காலை சிறப்பு திருப்பலி நடைபெற்றது, இதில் குழந்தைகள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

29 ஆம் தேதி மறைக்கல்வி மாணவர்களுக்கான விவிலிய கலைவிழா, கிறிஸ்துராஜபுரம் பங்கில் நடைபெற்றது.

31 ம்தேதி இரவு 11.30 மணிக்கு வருட இறுதி ஆராதனை மற்றும் புது வருட சிறப்பு திருப்பலி நடைபெற்றது.

### புனித அந்தோணியார் ஆலயம் – வயலங்கரை

டிசம்பர் 08 அமலோற்பவ திருநாளையொட்டி டிசம்பர் 01 முதல் 08 வரை சிறப்பு திருப்பலி மற்றும் ஜெபமாலை நடைபெற்றது. கடைசி நாளாகிய 08ம் தேதி ஜெபமாலை பவனி நடைபெற்றது.

டிசம்பர் 09 ம் தேதி முதல் 22 ம் தேதி வரை கிறிஸ்து பிறப்பு பாடல் (பஜனை) எல்லா குடும்பங்களிலும் பாடப்பட்டது.

டிசம்பர் 18 ம் தேதி கிறிஸ்துமஸ் ஏல சந்தை நடைபெற்றது., 23 ம் தேதி கிறிஸ்து பிறப்புக்கு ஆயத்தமாக ஒப்புரவு வழிபாடு நடைபெற்றது. 24 ம் தேதி கிறிஸ்து பிறப்பு திருப்பலியும் தொடர்ந்து தொடர்ந்து இளையோர்கள் தலைமையில் கிறிஸ்துமஸ் மரவிழா குலுக்கல் நடைபெற்றது.

2022 டிசம்பர் 26 திங்கள்கிழமை புதுக்கோயிலின் 10 வது ஆண்டு விழாவையொட்டி சிறப்பு திருப்பலி மற்றும் உறவிய ஆண்டுவிழா நடைபெற்றது. எல்லா உறவிய மக்களும் கலந்து கொண்டு கலைநிகழ்ச்சிகள் நடத்தினர், சிறப்பாக செயல்பட்ட உறவியத்துக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.



*29 ம் தேதி மறைக்கல்வி மாணவர்களுக்கான விவிலிய கலைவிழா, கிறிஸ்துராஜபுரம் பங்கில் நடைபெற்றது, இதில் மறைக்கல்வி மாணவர்கள் கலந்து கொணடனர்.*

*31 ம் தேதி இரவு 11 மணிக்கு வருட இறுதி ஆராதனை மற்றும் புது வருட சிறப்பு திருப்பலி நடைபெற்றது.*

**தகவல் சேகரிப்பு : திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா, திருமதி, ஷைலா | மெரின் சுஜித்**

## *மறைமாவட்ட புலம்பெயர்ந்தோர் திருத்தொண்டு பணிக்குழு*

மறைமாவட்ட புலம் பேயர்ந்தோருக்கான கிறிஸ்மஸ் கூட்டம் *16.12.2022* வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் தக்கலை சங்கமத்தில் வைத்து நடைபெற்றது. இறைவணக்க பாடலோடு தொடங்கிய கூட்டத்தில் இயக்குனர் அருட்தந்தை சுமேஷ் வள்ளியாம்தடத்தில் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். குருகுல முதல்வர் பேரருட்தந்தை தாமஸ் பௌவத்துப்பறம்பில் அவர்கள் வாழ்த்துரை கூறினார்கள். குழு உறுப்பினர் திருமதி. மெரின் தேவிகா அவர்களும் வாழ்த்துரை வழங்கினார். ஆயர் அவர்கள் அனைவரோடும் இணைந்து கிறிஸ்மஸ் கேக் வெட்டி கிறிஸ்மஸ் செய்தி வழங்கினார். அனைவருக்கும் நினைவு பரிசு வழங்கப்பட்டது. இக்கூட்டத்தில் மறைமாவட்டத்தில் இருந்து புலம்பெயர்ந்து வாழ்வோர் குடும்பமாகவும் தனிநபராகவும் கலந்து கொண்டனர். அதோடு இக்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். நிகழ்வுகளை ஒருங்கிணைப்பாளர் திரு எட்வின்சன் தொகுத்து வழங்கினார். நிறைவாக அனைவரும் அன்பின் விருந்தில் பங்கு கொண்டு வீடு திரும்பினார்.



## இதர செய்திகள்

- திரு இருதய துறவற சபையின் மாகாண தலைவி அருட்சகோதரி அல்போன்சா தொட்டுங்கல் SH மற்றும் கவுண்சிலர் அருட்சகோதரி ட்ரீசா மேத்யூ SH ஆகியோர் 2022 டிசம்பர் 09 அன்று தக்கலை ஆயர் இல்லத்தில் வருகை புரிந்தார்கள்
- நம்பிக்கை ஆலயம் தனது வெள்ளி விழாவை 2022 டிசம்பர் 20 அன்று தொடங்கியது.
- அருட்சகோதரர் டிவின், திருதொண்டர் ஆயத்த பயிற்சியின் முதல் பகுதியை கயத்தாறு மறைபரப்பு பகுதியில் நிறைவு செய்தார். தொடர் பயிற்சியை முக்கூட்டுகல், இளங்குருமடத்தில் தொடங்கியுள்ளார்.
- அருட்தந்தை ஜினோய் தொட்டியில் திருநெல்வேலி திருத்தொண்டு பணிக்காக 2023 ஜனவரி 12 அன்று மூன்று வார பயணமாக ஆஸ்திரேலியா செல்கிறார்.
- ராமநாதபுரம் மறைமாவட்டத்திலிருந்து நான்கு திருதொண்டர்கள் 2023 ஜனவரி 31 அன்று நமது மறைமாவட்டத்திற்கு இறைபணிக்காக வருகை தர உள்ளனர் 2023 பிப்ரவரி 28 வரை நமது மறைமாவட்டத்தில் செயல்படுவார்கள்

---

| FEASTDAYS OF REV. FATHERS - JANUARY 2023 | |
|---|---|
| Fr. Johnsilal Arackaparampil | 03 |
| Fr. Sanil Panthichirackal | 03 |
| Fr. Akhil Karikkathara CMI | 03 |
| Fr. Davis Karukappally | 20 |
| Fr. Justin Cheruvelil | 20 |
| Fr. Mijo Puthenpurayil | 20 |
| Fr. Robin Koorumullil | 20 |
| Fr. Sebastian Pothemparampil MST | 20 |
| Fr. Seby Manimalakandathil | 20 |
| Fr. Shijo Jose Aikkarakunnel | 20 |

## MONTHLY AGENDA – JANUARY 2023

| DATE | DAY | TIME | EVENTS |
| --- | --- | --- | --- |
| 1 | Sun | 09.30 am<br>07.00 pm | MathruJyothis Seminar at Thettiyodu<br>CML: Eparchial Executive Meeting (online) |
| 3 | Tue | 06.30 pm | Erection of Kuttaicode St. Chavara Mission Station as Mission Parish |
| 5 | Thu | 02.30 am | MathruJyothis Bible sentence writing competition at Padanthalumoodu |
| 6 | Fri | 09.30 am<br>07.00 pm | Syro Malabar Mission Week celebrations begin at Eparchial level<br>CML: Parish based Adoration<br>Sinai One day Convention at Vattakottai<br>Denha Reflective talk releasing by Migrants Apostolates |
| 8 | Sun | 10.45 am<br>02.30 pm | Catechesis BTCT Batch I at Kalluvilai<br>Uraviam Leaders Training at Tenkasi |
| 9 | Mon | 06.30 pm | Vocation Directors' Meet |
| 10 | Tue | 06.30 pm | Forane Priests' conference (except for Thuc Padanthalumoodu |
| 12 | Thu | | *Syro Malabar Mission Week celebrations end at Eparchial level* |
| 13 | Sun | 09.30 am<br>06.30 pm | Marriage Preparation Course at Kalluvilai<br>Night Vigil at Sinai Retreat Centre, Kalluvilai |
| 14 | Mon | 09.30 am<br>10.00 am<br>10.00 am<br>10.00 am<br>11.30 am | Marriage Preparation Course at Kalluvilai<br>KKSSS Day Celebration at Kalluvilai<br>Sinai One day Convention at Palugal& Manjalumoodu (Forane level)<br>Eparchial Level Students' Competition at Padanthalumoodu<br>KII Committee Meeting at Padanthalumoodu |

| | | | |
|---|---|---|---|
| 15 | Sun | 10.45 am | Special Collection for Mission Week<br>Catechesis BTCT Batch I at Kalluvilai<br>CML: Fasting for Mission Areas by Animators and Students |
| 16 | Mon | 10.00 am<br>10.00 am | SMYM Pongal Celebration and training programme at Kalluvilai<br>KKSSS Educare Class |
| 17 | Tue | 09.30 am<br>02.30 pm | Priests' Recollection at Kalluvilai<br>Forane Vicars' Meeting at Kalluvilai |
| 18 | Wed | | *One week prayer for Christian Unity* |
| 21 | Sat | 09.30 am<br>09.30 am<br>02.30 pm | One day Convention at Soosaipuram (Forane level)<br>One day Convention at Sinai Retreat Centre, Kalluvilai<br>KII Animators' Meet at Kalluvilai<br>Last date to submit competition name list with birth certificate |
| 22 | Sun | <br>10.45 am<br>02.30 pm<br>02.30 pm<br>02.30 pm<br>04.00 pm | CML: Visiting Mission (parish level)<br>Catechesis BTCT Batch I at Kalluvilai<br>MathruJyothis Eparchial level Bible Quiz at Padanthalumoodu<br>SMYM Kaliyal Forane Gathering<br>Uraviam Leaders Training at Padanthalumoodu (Forane level)<br>Tenkasi Mission Silver Jubilee Concluding celebration |
| 25 | Wed | | *One week prayer for Christian Unity ends* |
| 26 | Thu | 10.00 am<br>10.00 am<br>10.00 am<br>10.00 am<br>05.00 pm | Forane level catechesis Teachers' competition at Padanthalumoodu<br>Eparchial level Bible Quiz Competitions for catechesis teachers at Padanthalumoodu<br>Educare Class at Kalluvilai<br>One day work shop on photography & Videography at Padanthalumoodu by Pulari Communication<br>Uraviam Online Meet of Animators |
| 29 | Sun | 02.30 pm | CML Platinum Jubilee Celebration at Kalluvilai |
| 30 | Mon | 04.00 pm | Curia Meeting |

From the Eparchial Chancery

# BISHOP'S ENGAGEMENTS - JANUARY 2023

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Sun | | HAPPY NEW YEAR 2023<br>Changanassery: Benefactors Visit >> Thuckalay |
| 2 | Mon | 10.00 am<br>06.00 pm | Bishop's House: SMSM General Superior Visit<br>Bishop's House: Visit of Geetha Village Children from Moolamattam |
| 3 | Tue | 05.00 pm<br>06.30 pm | Padanthalumoodu: Marriage Reception<br>Kuttaicode: Mission parish Erection |
| 4 | Wed | 08.30 am | >> Tanjore: Health Care Commission Secretaries meet |
| 5 | Mon | 07.00 am | Tanjore: Health Care Commission Secretaries meet >> Kakkanad |
| 6-14 | | 06.00 pm | Kakkanad: Syro-Malabar Synod |
| 15 | Sun | 06.45 am | Changanassery: Feast Day Holy Qurbana at Muttar >> Thuckalay |
| 16 | Mon | 09.30 am | Bishop's House: Curia meeting |
| 17 | Tue | 10.00 am<br>05.00 pm | Kalluvilai: Priests' Recollection<br>Tenkasi: Jubilee of Dorothean Sisters >> Thoothukudi |
| 18 | Wed | | Thoothukudi: TNBC Meeting |
| 19 | Thu | 05.00 am | >> Ernakulam |
| 20 | Fri | 10.00 am | Ernakulam: Marriage Reception |
| 21 | Sat | 05.00 am | Tenkasi: Pulari School Annual Day |
| 22 | Sun | 04.00 pm | Tenkasi Mission Silver Jubilee Conclusion |
| 23 | Mon | 09.30 am<br>05.45 pm | Bishop's House: Meeting Rev. Fathers<br>Mukkuttukal: Feast Day Holy Qurbana |
| 24 | Tue | | Bishop's House: Meeting Rev. Fathers |

| | | | |
|---|---|---|---|
| 25 | Wed | 09.30 am<br>05.00 pm | Bishop's House: Meeting Rev. Fathers<br>Christurajapuram: School Annual day |
| 26 | Thu | 09.30 am<br>04.00 pm | Mukootukal: Minor Seminary Home Day<br>Ampoori: Feast Day Holy Qurbana |
| 27 | Fri | <br>04.30 pm | Bishop's House: Meeting Rev. Fathers<br>Soosaipuram: APJM School Annual Day |
| 28 | Sat | | Bishop's House: Reception to Major Archbishop and Bishops |
| 29 | Wed | 02.30 pm | CML Platinum Jubilee Conclusion |
| 30 | Thu | 09.30 am | Curia Meeting |
| 31 | Fri | 06.00 pm | Sangamam: Feast of Don Bosco |

Rev. Fr. Robin Jose, Bishop's Secretary

---

| BIRTHDAY OF REV. FATHERS- JANUARY - 2023 | |
|---|---|
| Fr. Luka Kollamparampil CMI | 17 |
| Fr. Ajin Jose | 17 |
| Fr. Toji Parampilparampil | 18 |
| Fr. Sumesh Valliyamthadathil | 18 |
| Fr. Sanil Panthichirackal | 20 |
| Fr. Jomy Kamukummattathil | 20 |
| Fr. Printo Kurias | 21 |
| Fr. Antony Chundelikkatt | 24 |
| Fr. Lijo Thekkel | 24 |
| Fr. Geo Choozhikunnel | 26 |
| Fr. Jomon Mangalamadathil | 26 |





TENKASI, ANPU ILLAM CHAPEL & PULIYARAI KURUSADI BLESSINGS, 17.12.2022





KUZHANDAI ESO PRE-CHRISTMAS (Nithiravilai, 17.12.2022) TENKASI MISSION PRE-CHRISTMAS (17.12.2022)




SMYM, PRE-CHRISTMAS (THETTIYODE, 18.12.2022)






KKSSS GOLDEN JUBILEE, KALLUVILAI, 05.12.2022





PRIESTS' PRE-CHRISTMAS (Sangamam, 19.12.2022) & CATECHISM FORANE BIBLE FEST, (Manjalumoodu, 19.11.2022)

For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570